
# வானவில்

VAANAVIL
ISSUE – 68,69,70 OCTOBER 2016

இதழ் – 68, 69, 70 ஐப்பசி 2016


# அரசாங்கம் பதவி விலக வேண்டும்!



**2015** ஜனவரி 8ஆம் திகதி இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற மைத்திரிபால சிறிசேனவுக்கும், அதே ஆண்டு ஓகஸ்டில் நடைபெற்ற பொதுத் தேர்தல் மூலம் பிரதமராகப் பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான சந்தர்ப்பவாத ‘தேன் நிலவு’ முடிவுக்கு வருகிறதா என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரும் இணைந்து உருவாக்கிய தற்போதைய அரசாங்கத்திற்குள் ஆரம்பம் முதலே ஏராளமான முரண்பாடுகளும், இழுபறிகளும் இருந்து வந்தபோதிலும், இரு தரப்பினரதும் பரஸ்பர நலன்களுக்காக அவை மூடி மறைக்கப்பட்டே வந்தன.

ஆனால் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணிலால் நேரடியாகக் கையாளப்படும் குற்றப்புலனாய்வுப் பிரிவு, பாரிய நிதி மோசடி விசாரணைப் பிரிவு, இலஞ்ச விசாரணை ஆணைக்குழு என்பனவற்றின் செயற்பாடுகள் அரசியல் நோக்கம் கொண்டவை என விமர்ச்சித்து, தேவை ஏற்படின் தான் அவற்றின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட்டேன் எனப் பகிரங்கமாக அறிவித்த பின்னர், அரசாங்கத்திற்குள் உள்ள எதிரும் புதிருமான போக்கு அம்பலத்துக்கு வந்துள்ளது.

ஜனாதிபதியின் குற்றச்சாட்டை அடுத்து, இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவின் தலைவியான டில்றுக்சி விக்கிரமசிங்க (இவர் ரணிலின் நெருங்கிய உறவினர் எனக் கூறப்படுகிறது) தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதுடன், அவரது பதவி விலகலை ஜனாதிபதி வழமையான சம்பிரதாய மறுப்பு ஏதுமின்றி ஏற்றும் உள்ளார். இதிலிருந்து ஜனாதிபதி தனது கருத்தில் உறுதியாக உள்ளார் என்பது தெளிவாக உள்ளது.

அதுமட்டுமின்றி, முன்னாள் மத்திய வங்கி ஆளுநரும், ரணிலின் நெருங்கிய சகாவுமான அர்ச்சுனா மகேந்திரன் மத்திய வங்கி பிணை முறியை தனது நெருங்கிய உறவினருக்கு வழங்கிய விவகாரத்தில் பல கோடி ரூபா மோசடி நடந்ததும் அம்பலத்துக்கு வந்து, அதன் மீது ஜனாதிபதியின் நடவடிக்கைக்காக காத்துக் கிடக்கிறது.

இன்னொரு பக்கத்தில் தற்போதைய ‘நல்லாட்சி’ அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களின் ஊழல் நடவடிக்கைகளையும் விசாரிக்கும்படி ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. தற்போதைய அரசாங்கத்தின் ஆறு முக்கிய அமைச்சர்கள் பாரிய ஊழல்களில் ஈடுபட்டதாக ஜனாதிபதிக்கு தகவல் கிடைத்ததின் அடிப்படையிலேயே ஜனாதிபதி இவ்வாறான ஒரு உத்தரவை விடுத்ததாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அந்த அமைச்சர்களில் பெரும்பாலானவர்கள் பிரதமர் ரணிலின் நெருங்கிய சகாக்கள் என்றும் கூறப்படுகிறது.

கடந்த காலத்தில் தற்போதைய மைத்திரி – ரணில் அரசாங்கம் மீது நாட்டின் முற்போக்கு – ஜனநாயக – தேசபக்த சக்திகள் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வந்துள்ளன. அதற்குக் காரணம் தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த நாளிலிருந்தே மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதற்கு மாறாக, தமது அரசியல் எதிரிகளை, குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குடும்பத்தினரையும், அவரை ஆதரிப்போரையும் பழிவாங்குவதிலேயே பெரிதும் ஈடுபாடு காட்டி வந்துள்ளது.

இதுபற்றி ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் அடிக்கடி குறிப்பிட்டு வந்துள்ள போதிலும். ரணில் அரசாங்கம் அதைப்பற்றி எவ்வித கவனமும் செலுத்தாமல் தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதிலும், முடமாக்குவதிலும்தான் அக்கறை செலுத்தி வந்தது. ஐக்கிய தேசியக் கட்சி அரசுகளைப் பொறுத்தவரை இது ஒன்றும் புதுமையான விடயமல்ல.

1947இல் நடந்த சுதந்திர இலங்கையின் பொதுத் தேர்தலின்போது, இந்திய வம்சாவழித் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் மலையகப் பகுதிகளில் ஐ.தே.கவுக்கு எதிரான வேட்பாளர்களை அதிக அளவில் அந்த மக்கள் வெற்றிபெற வைத்துவிட்டார்கள் என்பதற்காக, அவர்களைப் பழிவாங்குவதற்காக அந்த மக்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கியவர் அப்போதைய ஐ.தே.க. பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க.

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# மலையகத் தொழிலாளர்களின் போராட்டம் தரும் படிப்பினைகள்

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி நடாத்திய போராட்டம் மீண்டும் ஒருமுறை பரிதாபகரமாகத் தோல்வியைத் தழுவியுள்ளது. அவர்கள் 1000 ரூபா சம்பள உயர்வும், 18 மாதங்களுக்கான சம்பள நிலுவையும், வாரத்தில் ஆறு நாள் தொழிலும் கிடைக்கவேண்டுமென்று கோரியே தமது போராட்டத்தை நடாத்தினர். ஆனால் கம்பனிகள் சார்பாக தோட்ட முதலாளிமார் சம்மேளனமும், தொழிலாளர்கள் சார்பாக இ.தொ.கா., இ.தே.தோ.தொ.ச. மற்றும் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியும், அரசாங்கமும் சேர்ந்து தோட்டத் தொழிலாளர்களின் தலையில் மண் அள்ளிப் போட்டுவிட்டு, வெறுமனே 730 ரூபா சம்பளமும் ஆறு நாள் தொழிலுமே வழங்கப்படும் என முடிவு செய்துள்ளன. அதிலும் அடிப்படைச் சம்பளத்தில் 50 ரூபா மட்டுமே அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது. இதர கொடுப்பனவும் சேர்த்து 110 ரூபா மட்டுமே அதிகரித்துள்ளது. அத்துடன் இதுவரை காலமும் சம்பளக் கூட்டு ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டு வந்த நிலுவை சம்பள நடைமுறை இல்லால் ஆக்கப்பட்டுள்ளது.

மலையக மக்களுக்காகப் போராடவென ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகத் தொழிற்சங்கங்கள் இருந்து வருகின்றன. பின்னர் அவற்றில் சில தம்மை அரசியல் கட்சிகளாகவும் மாற்றிக் கொண்டன. நாடாளுமன்றப் பிரதிநிதித்துவமும் அவர்களுக்குக் கிடைத்தது. சில கட்சிகள் மாறிமாறி வரும் அரசுகளில் மந்திரிப் பதவிகளும் பெற்றன. இருந்தும் அரசியல் கனவான்களின் வாழ்க்கையில் சுபீட்சம் ஏற்பட்டதேயொழிய, வியர்வையையும், இரத்தத்தையும் சிந்தி உழைக்கும் தொழிலாளர்களின் வாழ்க்கையில் எந்தக் குறிப்பிடத்தக்க மாற்றமும் ஏற்படவில்லை. அவர்களை தென்னிந்தியாவிலிருந்து கூலி அடிமைகளாக அழைத்து வந்த பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் எப்படி வைத்திருந்தார்களோ, ஏறத்தாழ அதே நிலையிலேயே அவர்கள் சுதந்திர இலங்கையிலும் வைத்திருக்கப்படுகிறார்கள்.

ஆனால் அவர்களது வாழ்வில் இந்தமுறை ஒரு சிறிய மாற்றம் நிகழ்ந்துள்ளது. அதாவது, தமது தொழிற்சங்க மற்றும் அரசியல் தலைமைகளின் வழமையான வாக்குறுதிகளில் நம்பிக்கை வைக்காது, தாமாகவே தன்னெழுச்சியாக தமது சம்பளவுயர்வுப் போராட்டத்தை மலையகம் பூராவும் முன்னெடுத்தனர். அவர்களது போராட்டத்துக்கு இன அடிப்படையிலான அனுதாபம் காரணமாக வடக்கு கிழக்கிலும் ஆதரவு குரல்கள் எழுந்தன. ஆனால் அதேநேரத்தில் தென்னிலங்கையில் செயற்படுகின்ற பிரதான தொழிற்சங்கங்களிடம் இருந்து ஆதரவுக் குரல் எதுவும் எழுப்பப்படாதது, இலங்கையில் தொழிலாள வர்க்க ஒற்றுமை எவ்வளவு தூரம் இனவாத அரசியலால் கீழிறங்கிப் போயுள்ளது என்பதையும் எடுத்துக் காட்டியது.

எது எப்படியிருப்பினும், தொழிலாளர்களின் தன்னெழுச்சியான இந்தப் போராட்டம் கூட நடத்தப்படாது விட்டிருப்பின், இந்த 110 ரூபா சம்பள உயர்வு கூடக் கிடைத்திருக்காது. ஏனென்றால் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் ஆரம்பம் முதல் பிடிவாதமாகவே ஒரு சதம் தன்னும் சம்பள உயர்வு வழங்க முடியாது எனப் பிடிவாதம் பிடித்து வந்தது.

“தோட்டத் தொழிலாளர்கள், தொழிலாளர் வர்க்கக் குணமற்ற கம்பனிகளுக்கு அடிப்பணியும் தொழிற்சங்கங்களையும் ஆளும் வர்க்கத்தைச் சார்த்திருக்கும் நாடாளுமன்றத் தலைமைகளையும் கூட்டு ஒப்பந்த நேரத்தில் மாத்திரம் விமர்சித்து விட்டு, பின்னர் தேர்தலில் அவர்களை ஆதரித்து, பின்னர் மீண்டும் கூட்டு ஒப்பந்தத்தின் போது விமர்சிக்கும் போக்கை மாற்றி தொழிலாளர் வர்க்க உணர்வுடன் மாற்று பாதையை பற்றி சிந்திக்க வேண்டும்” என மக்கள் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் இ.தம்பையா கூறியுள்ளார்.

எதிர்பார்த்த வெற்றி கிடைக்காமல் சிறு தொகையே சம்பள உயர்வு கிடைத்தாலும், தோட்டத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு போராட்டத்தைத் தமது கைகளில் எடுத்ததாலேயே அது கிடைத்தது என்ற உண்மையை மனதில் வைத்திருக்க வேண்டும். அத்துடன் தன்னெழுச்சியான போராட்டங்கள் எப்பொழுதும் வெற்றிபெறுவது சாத்தியமற்றது என்ற உண்மையையும் உணர வேண்டும். எந்தவொரு போராட்டத்துக்கும் உருக்குப் போன்ற உறுதிவாய்ந்த தலைமை இருப்பது அவசியம். எனவே அவர்கள் தமக்காக உண்மையாகப் போராடும் தலைமையை உழைக்கும் தோட்டத் தொழிலாளர்களிடமிருந்தே எதிர்காலத்தில் உருவாக்க வேண்டும். தற்போதைய பெரிய கங்காணிமார்களின் வாரிசுகள், அரசாங்கத்தின் தரகர்கள், முதலாளிமாரின் எடுபிடிகள் ஆகியோர் தலைவர்களாக இருக்கும்வரை தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு உட்பட எந்தவொரு பிரச்சினையும் தீராது என்பதைத் தமது பட்டறிவு மூலம் உணர்ந்து கொள்வது இன்றைய அத்தியாவசியத் தேவையாகும் என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும்.

---

**வானவில்**

**தொடர்பு முகவரி:** ‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.


# இறுதி யுத்த நேரத்தில் இறந்தவர்களது உண்மையான தொகை எவ்வளவு?

இலங்கையில் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் முடிவுற்று ஏழு வருடங்கள் உருண்டோடிவிட்டன. ஆனால் இறுதி யுத்தத்தின் போது இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என ஒரு முடிவுக்கு வருவதில் சம்பந்தப்பட்ட தரப்புகள் இன்னமும் திண்டாடிக்கொண்டு இருக்கின்றன.

புலம்பெயர் நாடுகளிலும் தமிழகத்திலும் உள்ள புலிகளின் ஆதரவாளர்கள் இறுதி யுத்தத்தின் போது இறந்தவர்களின் தொகை ஒன்றரை இலட்சம், இரண்டு இலட்சம் என நாளொரு தொகையை வாய்க்கு வந்தபடி கூறி வருகின்றன. அதேநேரத்தில், ஐ.நாவும், சில மேற்கு நாடுகளும் நாற்பதாயிரம் வரையிலான மக்கள் மக்கள் இறந்ததாகக் கூறி வருகின்றன.

மறுபக்கத்தில் அரசாங்கமும், காணாமல் போனோரைக் கண்டறிய முன்னைய மகிந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம குழுவினரும் நாற்பதினாயிரம் பேர் இறந்ததாகக் கூறுவது மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என வாதிடுகின்றன.

அவர்களது வாதத்தில் அண்மையில் தேசிய பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியமும் இணைந்து கொண்டுள்ளது. ஒரு பகுதி சர்வதேச சமூகமும், சில நிறுவனங்களும் அப்படி ஒரு தொகையைக் கூறி வருகின்ற போதிலும், அது தவறானது என்றும், அதைத் தாம் தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்கத் தயாராக இருப்பதாகவும் அந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது. இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த தேசிய பல்கலைக்கழக ஆசிரிய ஒன்றியத்தின் செயலாளரும், ரஜரட்ட பல்கலைக்கழக விரிவுரையாளருமான டொக்டர் சன்ன ஜெயசுமன, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் இந்தப் போலிப் புள்ளி விபரங்கள் வெளியிடப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.



எதுஎப்படியிருந்த போதிலும், இறுதிக்கட்டப் போரின்போது நூற்றுக்கணக்கில் அல்ல, ஆயிரக்கணக்கில் மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டன என்பது உண்மையே. அதேநேரத்தில், இந்த இழப்புகள் அரச படைகள் மற்றும் புலிகள் என்ற இரண்டு தரப்பாலும் ஏற்படுத்தப்பட்டன என்பதும் யாரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

## அம்பலவாணன்

இது ஒருபுறமிருக்க, இங்கே கேள்வி என்னவென்றால், ஏன் இதுவரை காலமும் இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் தொகையை இலங்கை அரசாங்கத்தாலோ அல்லது ஐ.நா. போன்ற சர்வதேச நிறுவனங்களாலோ கணக்கிட முடியவில்லை என்பதாகும். இதுவரை அதற்கான ஒரு பொறிமுறையோ, முயற்சிகளோ தானும் ஏன் மேற்கொள்ளப்படவில்லை? இங்கேதான் சம்பந்தப்பட்ட தரப்புகள் மீது சந்தேகம் வருகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை, மற்றைய பல நாடுகளில் இல்லாத அரச நிர்வாகக் கட்டமைப்பு முறை ஓரளவு சிறப்பாக உள்ளது. மக்களால் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்றம், மாகாணசபைகள், பிரதேச சபைகள், மாநகர சபைகள் ஒருபுறமிருக்க, அரச நிர்வாகத்தைத் தடையின்றி கொண்டு நடாத்தும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கிராமசேவை அலுவலர்கள் என ஒரு சீரான கட்டமைப்பு உண்டு.

இதில் கிராமசேவை அலுவலர்கள் என்போர்தான் அரச நிர்வாகத்தை அடிமட்டம் வரை கொண்டு செல்லும் முதுகெலும்பாக இருக்கின்றனர். இலங்கையின் எல்லாக் கிராமங்களுமே ஏதாவதொரு கிராமசேவை அலுவலர்களுக்குக் கீழ்தான் நிர்வகிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மனிதர்களினதும், வதிவிட அத்தாட்சி, அடையாள அட்டை, பிறப்பு - இறப்பு, திருமணம், பல்வகை நிவாரணங்கள் என கிராமசேவை அலுவலர்களுக்குத் தெரியாமல் எதுவுமே நடைபெறுவதில்லை.

அப்படியிருக்க, இந்தக் கிராமசேவை அலுவலர்கள் ஊடாக இறுதி யுத்தத்திற்கு முன்னர் ஒவ்வொரு கிராமசேவை அலுவலர் பிரிவிலும் யார் யார் வசித்தார்கள், இப்பொழுது யார் இல்லை, அவர்களுக்கு என்ன நடந்தது போன்ற விடயங்களை ஏன் அரசாங்கத்தால் இதுவரை திரட்ட முடியாமல் இருக்கின்றது? இதற்கான முயற்சி ஏதாவது எடுக்கப்பட்டதா? போன்ற விபரங்கள் யாருக்குமே தெரியாது. அரசாங்கம் இந்த விடயத்தில் அசட்டையாக (அல்லது திட்டமிட்டு) இருப்பதால், ஆளுக்காள் தமது தேவைகளுக்காக இறந்தவர்களது எண்ணிக்கைப் புள்ளி விபரங்களை வாய்க்கு வந்தபடி சொல்லுவதற்கு அரசாங்கமே வாய்ப்புத் தேடிக் கொடுத்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.

அரசாங்கம் ஒருபக்கம் இருக்கட்டும். புலிகள் இருக்கும் வரை அவர்களே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி என்றும், அவர்கள்

அழிக்கப்பட்ட பின்னர் தாங்களே ஏகப்பிரதிநிதிகள் என்றும் சொல்லி வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இந்த விடயத்தில் கபடத்தனமான மௌனம் சாதிப்பது எதற்காக?

அது ஒருபுறமிருக்க, தர்க்கரீதியாகப் பார்க்கும் போது, கொல்லப்பட்டவர்களின் தொகை சம்பந்தமாக வெளியிடப்படும் புள்ளி விபரங்கள் பொருத்தமற்றவையாக இருப்பதைக் காண முடிகின்றது. ஏனெனில், இறுதி யுத்த நேரத்தில் களத்தில் நின்று செயல்பட்ட வைத்திய அதிகாரிகளினதும், சில தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகளினதும், சில பொதுமக்களினதும் தகவல்களின்படி, எறிகணை வீச்சாலேயே அநேகமானோர் மரணமடைந்திருக்கின்றனர் எனத் தெரிய வருகின்றது. எறிகணைகள் தனி ஒரு மனிதனுக்காக ஏவப்படுவதில்லை. அதுவுமல்லாமல், இறுதி நேரத்தில் இலட்சக்கணக்கான மக்கள் ஒரு சிறிய பிரதேசத்தில் மிகவும் நெருக்கமாக முண்டியடித்துக்கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள். எனவே இராணுவத்தினரின் எறிகணை ஒரு இடத்தில் வீழ்ந்து சுமார் பத்து பேரளவில் இறந்தால், அவர்களைச் சுற்றி இருந்த ஐம்பது பேராவது காயமடையக்கூடிய சாத்தியம் உண்டு. அதுவும் அது கொத்தணிக் குண்டாக இருந்தால் (அப்படி ஒரு குற்றச்சாட்டு இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டுள்ளது) நிலைமை இன்னும் மோசமாக இருந்திருக்கும். அப்படிப் பார்த்தால், ஐ.நாவும், மேற்கு நாடுகளும் சொல்லும் நாற்பதாயிரம் பேர் இறந்திருந்தால், குறைந்தபட்சம் நாலு இலட்சம் பேர் காயமடைந்திருக்க வேண்டும்.

அதேபோல, புலிகளின் ஆதரவாளர்கள் சொல்லும் ஒன்றரை இலட்சம் பேர் இறந்திருந்தால், குறைந்தபட்சம் பதினைந்து இலட்சம் பேராவது காயமடைந்திருக்க வேண்டும். ஆனால், இவ்வளவு தொகையான பேருக்கு அந்த நேரத்தில் அங்கு கடமையாற்றிய வைத்தியர்களோ, செஞ்சிலுவைச் சங்கமோ சிகிச்சை அளித்ததாக தகவல் ஏதும் இல்லை.

மறுபக்கத்தில், இறந்தவர்கள் தொகையிலும், காணாமல் போனவர்கள் தொகையிலும் பலர் வெளிநாடுகளுக்குத் தப்பியோடி மறைந்து வாழ்வதாக பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகளே கடந்த காலங்களில் சொல்லி வந்திருக்கிறார்கள். இதுவும் ஒரு மிகைப்படுத்தப்பட்ட, உண்மையை மறைக்க முயலும் கதையாகும். வசதி வாய்ப்புகள் கிடைத்த ஒரு சிலர் தப்பிச் சென்றது உண்மையேயாயினும், இவ்வளவு பெரும் தொகையானோர் தப்பிச் சென்றது என்பது நம்ப முடியாத கட்டுக்கதையாகும்.

இந்த விவகாரத்தில் நடைபெறும் இழுபறிகளையும், கண்ணாமூச்சி விளையாட்டுகளையும் வைத்துப் பார்க்கையில், அரசாங்கமும், தமிழ் தரப்பும் தத்தமது அரசியல் இலாபங்களுக்காக திட்டமிட்டு நாடகம் ஆடுவதாகச் சந்தேகிக்க இடமுண்டு. அல்லாவிடின், இவ்வளவு காலமாக இந்தப் பிரச்சினைக்கு இவர்களால் ஏன் தீர்வுகாண முடியாமல் இருக்கின்றது?

முன்னைய மகிந்த ஆட்சியை விடுவோம். நல்லாட்சி வேண்டும் என்று இன்று பதவியில் இருக்கும் மைத்திரி – ரணில் அரசைப் பதவிக்குக் கொண்டு வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் போன்ற சிறுபான்மை தேசிய இனக் கட்சிகளோ அல்லது முழுமக்களுக்கும் விடுதலையையும், சோசலிசத்தையும் கொண்டு வரப்போவதாக சூளுரைத்து வரும் ஜே.வி.பியினரோ கூட, இந்த விடயத்தில் பேசாமடந்தைகளாக இருப்பதின் மர்மம் என்ன?

எனவே, இந்தப் பிரச்சினையை அரசாங்கமோ அல்லது அரசியல் கட்சிகளோ, ஐ.நாவோ அல்லது வேறெந்த வெளிநாடுகளுமோ தீர்த்து வைப்பார்கள் என்று நம்புவதற்கு இனியும் இடமில்லை. இருக்கின்ற ஒரே வழி, நாட்டிலுள்ள உண்மையான ஜனநாயகவாதிகள், தேசபக்தர்கள், அறிவுஜீவிகள், மனித உரிமைவாதிகள், தொழிற்சங்கவாதிகள், சமய – சமூகத் தலைவர்கள் ஆகியோரைக் கொண்ட சுயாதீனமான ஒரு உண்மையைக் கண்டறியும் குழுவை அமைத்து, இந்த விடயத்தில் உண்மைகளைக் கண்டறிவதுடன், அரசாங்கத்தினதும் அரசியல்வாதிகளினதும் மோசடித்தனங்களையும் அம்பலத்துக்குக் கொண்டுவர வேண்டும். இதைத்தவிர, இப்போதைக்கு வேறு வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

# "புதிய குற்றவியல் சட்டமூலம் சந்தேக நபர்களின் அடிப்படை உரிமையை மீறுகின்றது"! இடதுசாரிக் கட்சிகள் கண்டனம்!!

**இ**லங்கை அரசாங்கம் புதிதாகக் கொண்டுவர உத்தேசித்திருக்கும் திருத்தப்பட்ட குற்றவியல் சட்டம் சந்தேக நபர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளது என இடதுசாரிக் கட்சிகள் கூட்டாகத் தெரிவித்துள்ளன. அண்மையில் பொரளையில் அமைந்துள்ள டாக்டர் என்.எம்.பெரேரா நிலையத்தில் நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவைகள் இதனைத் தெரிவித்துள்ளன.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய சோசலிச கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவருமான ராஜா கொல்லுரே,

"கொண்டுவரப்படவுள்ள புதிய திருத்தப்பட்ட குற்றவியல் சட்டத்தின்படி, சந்தேக நபர் ஒருவர் பொலிசாரிடம் வாக்குமூலம் அளிக்கையில் அவரது சட்டத்தரணி அங்கு பிரசன்னமாக இருக்க முடியாது என நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவித்திருக்கிறார். இது சந்தேக நபர் ஒருவரின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும். சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசாரணைகளின் போது தனது சட்டத்தரணியைக் கலந்தாலோசிக்கும் உரிமை அவசியம் இருக்க வேண்டும். புதிய சட்டத்தில் அதை ஒழிப்பதை நாம் வன்மையாக எதிர்ப்பதுடன், எமது கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். நாம் மட்டுமல்ல, இந்த விடயத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...

**முற்குறிப்பு:**

இந்தியாவில் இடதுசாரிக் கட்சிகளின் – குறிப்பாக ஓரளவு மக்கள் செல்வாக்கு உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் – கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களில் உள்ள தவறுகள் குறித்து 'வானவில்' அவ்வப்போது சுட்டிக்காட்டி வந்துள்ளது. நாம் சுட்டிக்காட்டிய தவறுகளில் உள்ள நியாயப்பாடுகளை ஒத்த கட்டுரை ஒன்று 'தி இந்து' நாளிதழில் அண்மையில் வெளியானது. எமது வாசகர்களுக்காக அதைக் கீழே தந்துள்ளோம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஏகாதிபத்திய சார்பு வலதுசாரி அரசுகள் பதவிக்கு கொண்டுவரப்பட்டுள்ள சூழலில், இந்திய இடதுசாரி கட்சிகள் தமது கொள்கைகள், தந்திரோபாயங்களைச் சீர்செய்து தம்மைப் பலப்படுத்திக் கொள்வது தென்னாசியப் பிராந்தியத்தின் மக்கள் போராட்டங்களுக்கு அத்தியாவசியமாகும் என்பதே எமது கருத்தாகும்.

–வானவில் ஆசிரியர் குழு

# நெகிழட்டும் இடதுசாரிகளின் உத்தி!

## – ஜோயா ஹஸன்

**<u>வகுப்புவாதத் திட்டங்களுக்கு எதிராக இடதுசாரிகள் மட்டும் தனியாகப் போராட முடியாது</u>**

மேற்கு வங்கத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியும் இடதுசாரிகளும் இணைந்து பணியாற்றினார்கள். அரசியலிலும் சித்தாந்தத்திலும் அவர்கள் பழைய எதிரிகள். அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாத இந்தக் கூட்டணி மார்க்சிஸ்ட் கட்சியிலும் இடதுமுன்னணியிலும் அனைத்துத் தரப்பினராலும் ஏற்கப்பட்டதாக இல்லை. இந்தக் கூட்டணி இடதுசாரிகளுக்குப் பயன்தரவில்லை என்பது எதிர்பாராத விஷயம்தான்.

தேர்தல் உத்திகள் தொடர்பாகத்



தீவிரமான கருத்து வேறுபாடுகள் அந்தக் கட்சிக்குள் உருவாகியிருக்கின்றன. காங்கிரஸ் கட்சியோடு வைத்துக்கொள்ள வேண்டிய அணுகுமுறை என்பது இந்திய இடதுசாரிகளின் வரலாற்றில் மிகவும் வேதனை தரும் பிரச்சினையாகப் பல நேரங்களில் இருந்துவந்துள்ளது. அது தொடர்கிறது.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இடதுசாரிகள் அவர்களின் உத்திகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான ஒரு நெருக்கடியில் சிக்கியிருக்கின்றனர்.

**கூட்டணிகளின் பிரச்சினை**

மேற்கு வங்கத் தேர்தல் தோல்வியைக் கணக்கில் கொண்டு மார்க்சிஸ்ட் கட்சி அத்தகைய கூட்டணிகளை எதிர்காலத்தில் தவிர்க்க வேண்டுமா, அல்லது அதனால் கிடைக்கும் நீண்டகாலப் பயனை மனதில்கொண்டு அத்தகைய கூட்டணிகளைத் தொடர்ந்து அமைக்க வேண்டுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இதை விரிவான அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும்.

பெரும்பான்மைவாதத்தைப் பேசுகிற அரசியல் தற்போது ஆதிக்க நிலையில் இருக்கிறது. மாற்றுக் கருத்து கொண்டவர்கள் வேட்டையாடப்படுகிறார்கள். கல்வி மற்றும் பண்பாட்டு அமைப்புகள் காவிமயமாகின்றன. பிரதமரின் அலுவலகத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. உத்தரப்பிரதேசத்தில் 2017–ல் தேர்தல் நடைபெற உள்ளது. அங்கே முஸாபர்நகர், தாத்ரி சம்பவங்களை வைத்து மதவாத அரசியல் கிளப்பப்படுகிறது. கைய்ரானா பகுதியிலிருந்து இந்துக்கள் வெளியேறுகிறார்கள் என்று பீதி கிளப்பப்படுகிறது. இவையெல்லாம் உத்தரப்பிரதேசத் தேர்தலில் வெற்றிபெறுவதற்காகக் கிளப்பப்படுபவை. நாட்டில் உள்ள சமூக நல்லிணக்கத்துக்கு இது பெரிய தீமையை உருவாக்கும்.

இடதுசாரிகள் எவ்வளவுதான் குறைபாடுகளோடு இருந்தாலும் முற்போக்கான, பரந்த மனப்பான்மையுள்ள, சமூக அக்கறையுள்ள அரசியல் போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். சமூகத்தைப் பிளக்கிற போக்கை எதிர்கொள்வதற்கான விரிவான ஐக்கிய முன்னணி இப்போதைய தேவை.

**செயலில் இல்லாத எதிர்ப்பு**

அத்தகைய விரிவான ஐக்கிய முன்னணியைக் கட்டுவதற்கான உத்தி இடதுசாரிகளிடம் இருக்கிறதா அல்லது காங்கிரஸுக்கும் எதிர்ப்பு, பாஜகவுக்கும் எதிர்ப்பு என்னும் தங்களின் பழைய உத்திக்கு அவர்கள் முன்னுரிமை அளிக்கப் போகிறார்களா என்பதுதான் தற்போதைய பிரச்சினை.

வலதுசாரிகள் தற்போது மேலும் வலிமையான சக்தியாக வளர்ந்துள்ளனர். புதிய இடங்களில் வளர்ச்சியடையவும் அவர்கள் முயற்சி செய்கின்றனர். மற்ற முதலாளித்துவ அரசாங்கங்களைப் போல சாதாரணமானதாக பாஜக தலைமையிலான அரசாங்கத்தைப் பார்க்கக் கூடாது. அதனால், இந்த நேரத்தில் வலதுசாரிகளுக்கும் வகுப்புவாதம் மற்றும் புதிய தாராளமயத்துக்கும் எதிராகத் திரட்டப்படும் இயக்கத்தின் முன்னணியில் இடதுசாரிகள் இருக்க வேண்டும்.

ஆனால், இடதுசாரிகளின் செயலில் இது காணப்படவில்லை. மேற்கு வங்கத்திலும் கேரளாவிலும் இடதுசாரிகளின் செயல்பாடுகளில் வகுப்புவாதத்தை எதிர்ப்பதிலும் நவீன தாராளமயத்தை எதிர்ப்பதிலும் தேவையான அழுத்தம் இல்லை. உதாரணமாக, சகிப்புத்தன்மையின்மைக்கு எதிரான தேசிய விவாதத்தைக் கிளப்பிய தலையீடு

அறிவாளிகளிடமிருந்துதான் வந்தது. இடதுசாரி களிடமிருந்து வரவில்லை.

இந்துத்வா கொள்கையை மத்திய அரசாங்கம் திணிப்பதற்கு எதிராக எழுந்த எதிர்ப்பின் மையம், கல்வி மற்றும் பண்பாட்டு நிறுவனங்களைச் சுற்றித்தான் இருந்தது. அதுதான் பிரதமரை வெறுப்படைய வைத்தது. கல்வி வளாகங்களில் பல்வேறு பிரச்சினைகள் எழுவதற்குக் காரணமாக இருந்தார் என்பதுதான் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரை வேறு துறைக்கு மாற்ற வைத்தது. பாஜக – ஆர்எஸ்எஸ்ஸுக்கு எதிரான எதிர்ப்பை வலுப்படுத்துவதற்குக் காங்கிரஸையும் பாஜகவையும் சமமான தூரத்தில் வைத்துப் பார்க்கும் மனநிலை உதவுமா என்பது இடதுசாரிகள் கட்டாயம் எதிர்கொள்ள வேண்டிய முக்கியமான பிரச்சினை.

பாஜகவின் கொள்கைகளை எதிர்த்து மக்களின் கருத்தைத் திரட்ட வேண்டும் என்பதுதான் முக்கியமான பணி என்றால், அதற்காக அமைக்கப்படுகிற ஐக்கிய முன்னணிக்கு வெளியே காங்கிரஸ் கட்சியை நிறுத்துவது நடைமுறைக்குப் பொருந்தாது. மக்களைப் பிளவுபடுத்தும் வகுப்புவாதத் திட்டங்களுக்கு எதிராக இடதுசாரிகள் மட்டும் தனியாகப் போராட முடியாது.

அசாமிலும் கேரளத்திலும் தோல்வியடைந்த பிறகு, தற்போது காங்கிரஸ் எட்டு மாநிலங்களிலும் இரண்டு யூனியன் பிரதேசங்களிலும் ஆளுங்கட்சியாக இருக்கிறது. பாஜக 13 மாநிலங்களில் ஆளுங்கட்சியாக இருக்கிறது. மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் அரசுகளைக் கவிழ்க்க முயன்றுகொண்டிருக்கிறது. பாஜகவின் வளரும் ஆதிக்கத்தால், இந்தியாவின் மதச்சார்பின்மைக்கும் பன்மைத்துவத்துக்கும் ஜனநாயக அமைப்புகளுக்கும் ஏற்பட்டுள்ள ஆபத்துதான் இடதுசாரிகளின் கவலைக்குரிய விவகாரமாக இருக்க வேண்டும் காங்கிரஸ் அல்ல.

### ஐக்கிய முன்னணி

இடதுசாரிகள் வலுவாக இருக்கிற மாநிலங்களைப் பொறுத்தவரையில், பாஜக ஒரு உடனடி அபாயம் இல்லை என்பது உண்மைதான். சமீபத்தித் தேர்தல்களுக்குப் பிறகும் கேரளத்தில் பாஜக குறைவான அளவிலேயே இருக்கிறது. வட இந்தியாவுக்கும் மேற்கு இந்தியாவுக்கும் இடையே பெரிய வித்தியாசம் உள்ளது. மேற்கில், பாஜக தேர்தல்களின் மூலமாகவும் தனது சித்தாந்தத்தைப் பரப்புவது மூலமாகவும் வேகமாகப் பரவியுள்ளது. அங்கே பாஜகவை எதிர்க்கும் சக்திகள் பிரிந்து கிடக்கின்றன.

ஒன்று தெளிவு. இந்திய அரசியலில், தீர்மானிக்கிற சக்தியை இழந்துவரும் காங்கிரஸை எதிர்ப்பதன் மூலம், இந்திய அரசியலின் மையத்துக்கு இடதுசாரிகள் வர முடியாது.

மக்களைப் பிளவுபடுத்தும் வகையில் செயல்படும் ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் சவாலை எதிர்கொள்வதற்கான போராட்டத்தில் வகுப்புவாத அரசியலை எதிர்க்கும் எந்தவொரு சக்தியையும் புறக்கணிக்க முடியாது. காங்கிரஸும் அதற்கு விதிவிலக்கு அல்ல.

இன்றைய நிலைமைக்கேற்ப இடதுசாரிகள் தங்களின் கொள்கைகளை மாற்றியமைக்க வேண்டும். அவர்கள் புதிய சூழல்களுக்கேற்ப நெகிழ்வான உத்திகளை ஏற்க வேண்டும். வலதுசாரிகளோடு முரண்படும் ஜனநாயகச் சக்திகளோடு களத்தில் இணைந்து மக்களின் எதிர்ப்பை வளர்த்தெடுக்க வேண்டும். தேர்தல் களத்தில் ஒரு ஐக்கிய முன்னணியை அமைக்க வேண்டும்.

இடதுசாரிகளின் முன்பாக உள்ளது கடினமான பாதை. அதில் அவர்கள் முன்னேறுவதற்கு விரிவான எதிர்ப்பு முன்னணியை உருவாக்க வேண்டும். மேற்கு வங்கத்தில் ஏற்பட்ட காங்கிரஸ் – இடதுசாரிகள் அணி அத்தகைய ஒரு நடவடிக்கைதான். அது வெற்றி பெறவில்லை என்பது உண்மைதான். ஆனால், பாஜகவுக்கு எதிராகவும் மோடியை 2019-ல் எதிர்கொள்ளவும் ஒரு பெரிய இயக்கம் தேவைப்படுமே? அதன் மையக்கருவாக அமையப்போகிற மக்களை அணிதிரட்டுவதற்கான தேவையை அது குறைத்துவிடவில்லை.

**ஜோயா ஹஸன், பேராசிரியர், ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகம்**

**‘தி இந்து’ ஆங்கிலம்**

**சுருக்கமாகத் தமிழில்: த.நீதிராஜன்**

# சமுர்த்தி காட்டும் சமிக்ஞை!

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுற்று 7 ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும், மக்களின் வாழ்க்கைத்தரத்தில் முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இந்த உண்மையை சமுர்த்தி நிவாரணம் கோரி விண்ணப்பித்திருப்பவர்களின் தொகை அதிகரிப்பு எடுத்துக் காட்டுகிறது.

தற்போது வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற 14 இலட்சம் குடும்பங்கள் சமுர்த்தி நிவாரணம் பெற்று வருகின்றன. ஆனால் இம்முறை அந்த நிவாரணத்துக்காக விண்ணப்பித்தவர்களின் தொகையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

சமுர்த்தி நிவாரணம் வழங்கும் ‘திவி நெகும’ இலாகாவின் பணிப்பாளர் நாயகமான சந்திரா விக்கிரமசிங்க அம்மணி இதுபற்றிக் கூறுகையில், சமுர்த்தி நிவாரணம் கோரி 25 இலட்சம் பேர் இம்முறை விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். இவர்களில் உண்மையில் தகுதியானவர்களைக் கண்டறிய பிரதேசச் செயலாளர்கள் மூலம் நடவடிக்கை எடுத்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சிலர் பொய்யான தகவல்கள் கொடுத்து விண்ணப்பித்திருந்தாலும் கூட, இவ்வளவு பெருந்தொகையானவர்கள் சமுர்த்தி நிவாரணம் கோரியிருப்பது, மக்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சி அடைந்து செல்வதையே காட்டுவதாகப் பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த நிலைமையில், அரசாங்கம் உயர்நீதி மன்றத்தின் கருத்தையும் ஊதாசீனம் செய்து, ‘வற்’ வரியை அமுலுக்குக் கொண்டு வர விடாப்பிடியாக முயற்சிப்பது, ‘பனையாலை விழுந்தவனை மாடேறி மிதித்த’ கதையாக இருக்கிறது.

# அதிகாரத்தின் முன் செல்லாக் காசாகும் புத்திஜீவிகள்!

பேராசிரியர் ஜயதேவ உயன்கொட, கலாநிதி நிர்மால் ரஞ்சித் ஆகியோர் இலங்கையின் புத்திஜீவிகள் வட்டாரத்தில் பிரபல்யமானவர்கள். இவர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும், மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்கடித்து, மைத்திரிபால சிறிசேன — ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இன்றைய அரசைப் பதவிக்குக் கொண்டு வருவதில் சிவில் சமூகம் சார்பில் முக்கியமான பங்களிப்பை வழங்கியவர்கள்.

இவர்கள் செய்த 'சேவை'க்கு நன்றிக்கடனாக அரசாங்கம் இருவரையும் கல்வி அமைச்சின் உயர்கல்வி நிறுவனமான தேசிய கல்வி நிறுவனத்தின் நிர்வாக உறுப்பினர்களாக நியமித்தது. ஆனால் இலங்கையின் தொடர்ச்சியான ஒரு சாபக்கேடு, ஒவ்வொரு ஆட்சியின் போதும் கல்வித்துறையில் நிலவுகின்ற குழறுபடிகள். அது இன்றைய கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தையும் விட்டு வைக்கவில்லை. இன்றைய கல்வி அமைச்சரின் சில நடவடிக்கைகளை மேற்படி புத்திஜீவிகள் இருவரும் கண்டனம் செய்ய ஆரம்பித்தனர். 'நாம் பதவிக்குக் கொண்டு வந்த நல்லாட்சி தானே? எமக்கு விமர்ச்சிக்க உரிமையில்லையா?' என்று அவர்கள் நினைத்தார்கள் போலும். அதுவே அவர்களுக்கு வினையாக வந்து முடிந்திருக்கிறது. கல்வி அமைச்சர் அவர்கள் இருவரையும் தேசிய கல்வி நிறுவனத்தின் நிர்வாகத்திலிருந்து பதவி நீக்கம் செய்துள்ளார். (சில நாட்களுக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை விமர்ச்சித்த ஒரு அதிகாரி இடமாற்றம் செய்யப்பட்ட தகவலும் ஊடகங்களில் வெளியாகி இருந்தது)

இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் இருப்பவர்களில் பெரும்பாலானோர் உயர்கல்வி பெற்றவர்களோ, சொந்த நலனுக்கு மேலாக நாட்டு நலனை மேலாக வைப்பவர்களோ அல்ல. இலங்கையில் மட்டுமின்றி, இந்தியா உட்படப் பல தென்னாசிய நாடுகளின் நிலைமையும் இதுதான். அவர்கள் அந்தப் பதவிகளுக்குப் போட்டியிடுவது அதிகார ஆசைக்காகவும், பணம் சம்பாதிப்பதற்காகவும்தான். அப்படியான சூழலில் தம்மை எதிர்ப்பவர்களை "நீ செய்யிறதைச் செய் ராசா" என அவர்கள் விட்டு வைப்பார்கள் என எதிர்பார்த்தால் அது முட்டாள்தனம்.

அந்த அடிப்படையில்தான் மேற்படி புத்திஜீவிகள் இருவரும் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். ஏறிய ஏணியை உதைத்துத் தள்ளுவதென்பது, அரசியல்வாதிகளுக்குக் கைவந்த கலை. பழிவாங்கப்பட்டவர்களுக்காக கவலைப்படுவதா அல்லது இன்றைய ஆட்சியாளர்கள் நல்லாட்சி புரிவார்கள் என நினைத்து அவர்களைப் பதவிக்குக் கொண்டு வந்த அவர்களது முட்டாள்தனத்தை எண்ணி நகைப்பதா எனத் தெரியவில்லை.

- பெனடிக்ற்

# சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நாட்டை அதளபாதாளத்தில் தள்ளும்!

## பொருளாதார அமைப்பு எச்சரிக்கை!!

"அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் பெற்றுள்ள 1.5 பில்லியன் (150 கோடி) டொலர் கடனால் மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும்" என 'பொருளாதார ஜனநாயகத்துக்கான கூட்டமைப்பு' (The alliance for Economic Democracy) என்ற அமைப்பு தெரிவித்திருக்கிறது.

அந்த அமைப்பின் இணைப்பாளரான அமலி வெதகெதர என்ற பெண்மணி இதுபற்றிக் குறிப்பிட்டதாவது:

"ஏற்கெனவே பெற்ற கடன்களாலும், தவறான பொருளாதாரக் கொள்கைகளாலும், கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையில், மேலும் கடன் பெறுவதின் மூலம் அந்த நெருக்கடியில் இருந்து மீள முடியாது.

சர்வதேச நாணய நிதியம் பிரேரித்துள்ள குறுகிய கால, நீண்டகால பொருளாதார மீள்கட்டமைப்பு, சீர்திருத்தம் என்பன, நிலைமையை மேலும் மோசமாக்கவே வழிகோலும். அந்தக் கொள்கைகள் இந்த நவ — தாராளவாத அரசைப் பலப்படுத்த மட்டுமே உதவும்.

எமது வாழ்க்கையுடன் நேரடித் தொடர்பு உடைய பொருளாதாரம் மிகவும் நுட்பமான விஞ்ஞான முறையில் கையாளப்பட வேண்டும்.

அபிவிருத்தி என்பது மக்களை மையமாக வைத்துச் செய்யப்பட வேண்டும். குறிப்பாக, விவசாயிகள், மீனவர்கள் போன்ற பொருளாதார மைய ஓட்டத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகள் கருத்தில் எடுக்கப்பட்டு, அவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அது செயற்படுத்தப்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன், அதற்கான ஒப்பந்தம், அதன் தன்மை, நாணய நிதியத்தின் நிபந்தனைகள் என்பன, நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்குமா அல்லது எரியும் நெருப்பில் தள்ளி விடுமா? தாம் பெறுகின்ற கடன் தற்போதைய நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் என அரசாங்கம் கூறுகிறது. ஆனால், இந்தக் கடன் நாட்டை மேலும் நெருக்கடியில் தள்ளி விடுவதுடன், அதள பாதாளத்தில் விழுத்த மட்டுமே உதவப் போகின்றது."

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# உறியிலை நெய் இருக்க...

நமது ஊர்களில் வாய்க்கால்கரைகளிலும், வயல்கரை ஓரங்களிலும் 'நீர்முள்ளி' எனும் ஒரு தாவரம் சாதாரணமாகக் காணப்படும். அதன் அபரிமிதமான பயன்பாடு குறித்து 'மங்கையர் மலர்' இதழில் ஜே.சுகுணா என்பவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

சிறுநீரகக் கல்லை அறுவைச் சிகிச்சை செய்யாமல் நீக்க நீர்முள்ளி உதவுகிறது. வாயுக்களின் சீற்றத்தினாலும், அஜீரணக் கோளாறினாலும் வயிற்றுப்புண் ஏற்படுகிறது. நீர்முள்ளி இலைகளைக் கசாயம் வைத்துக் குடிக்க, புண்கள் நீங்குவதுடன், மலச்சிக்கலும் தீரும். மூல நோய்க்கு கண்கண்ட மருந்தாக விளங்குகிறது. தாது விருத்திக்கு நீர்முள்ளி மிகவும் உதவுகிறது. மொத்தத்தில் இது ஒரு சர்வரோக நிவாரணியாக விளங்குககிறது.

# மழை விட்டும் தூவானம் விடவில்லை!

ஜெர்மானிய சர்வாதிகாரி கொடுங்கோலன் ஹிட்லர் எழுதிய Mein Kampf (மெயின் காம்ப்ஃ) என்ற பிரசித்தி பெற்ற நூல், அவரது சுயசரிதையாகவும், அவரது அரசியல் வேலைத்திட்டமாகவும் கருதப்படுகிறது. அந்த நூலின் பிரதியொன்றை அவர் தனது பாவனைக்காக வைத்திருந்தார். அப்படி அவர் வைத்திருந்த அவரது சொந்தப் பிரதி ஏல விற்பனையொன்றில் 20,655 டொலர்களுக்கு விலை போயுள்ளது.

## சர்ச்சைகளில் நோபல் பரிசு

முதல் முதலில் இலக்கியத்துக்கான நோபல் பரிசை நோபல் கமிட்டி லியோ டால்ஸ்டாயைப் புறக்கணித்துவிட்டு சல்லி புருதோம் எனும் பிரெஞ்சு எழுத்தாளர் மற்றும் கவிஞருக்கு வழங்கியது இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. காலத்தைக் கடந்து நிற்கும் எழுத்தாளர்களான லியோ டால்ஸ்டாய், மக்சிம் கார்க்கி, மார்க் ட்வைன், எஸ்ரா பவுண்ட், செக்கோவ், ஜேம்ஸ் ஜோய்ஸ் முதலியோருக்கும் இலக்கிய நோபல் பரிசு வழங்கப்படவில்லை.




# தோட்டாவுக்குப் பதிலாக நோட்டா!

நோட்டாவும் (NOTA) மக்கள் நலக் கூட்டணி கட்சிகள் எடுத்த வாக்கு வீதமும்!

நோட்டா — 1.4 சதவிகிதம்

ம.தி.மு.க — 0.9 சதவிகிதம்

சி.பி.ஐ. — 0.8 சதவிகிதம்

விடுதலைச் சிறுத்தைகள் - 0.8 சதவிகிதம்

சி.பி.எம். — 0.7 சதவிகிதம்

தமிழ் மாநில காங்கிரஸ் - 0.5 சதவிகிதம்

புதிய தமிழகம் - 0.5 சதவிகிதம்

மக்கள் நலக் கூட்டணியில் உள்ள எந்தவொரு கட்சியும் எந்தவித பிரச்சாரமும் இல்லாமல் நோட்டாவுக்குக் கிடைத்த வாக்குகள் அளவுக்குப் பெறவில்லை என்பதிலிருந்தே இவர்களது மக்கள் செல்வாக்குத் தெளிவாகத் தெரிய வந்துள்ளது.

நோட்டா என்பது தேர்தலில் நம்பிக்கை இல்லை எனக் கருதுபவர்கள் அதற்காக வாக்களிப்பதற்கான சின்னமாகும். தமிழகத்தில் மட்டுமின்றி ஏனைய மாநிலத் தேர்தல்களிலும் கூட, பெருந்தொகையான மக்கள் இந்த 'ஜனநாயக' தேர்தல் திருவிழாக்களில் நம்பிக்கை இல்லை என வாக்களித்துள்ளதை அண்மைய தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

# புதுமொழி — எண்ணும் எழுத்துடன் கணினியும்

உலகில் வர்த்தகரீதியில் அதிவேகமான கணனிகளை உருவாக்குவதில் சீனா முன்னணியில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. கணனி உருவாக்கத்தில் நாடுகளின் தர வரிசை வருமாறு:

சீனா — 167 வகைகள்

அமெரிக்கா — 165 வகைகள்

யப்பான் - 29 வகைகள்

பிரான்ஸ் -18 வகைகள்

பிரித்தானியா — 12 வகைகள்

இந்தியா — 09 வகைகள்

# கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் கவனம்!

கைத்தொலைப் பேசிப் பாவனையின் போது, அதிலிருந்து புறப்படும் மின் கதிர்களால் மூளையிலும், இருதயத்திலும் புற்றுநோய் உருவாக வாய்ப்புகள் இருப்பதாக, எலிகள் மீதான புதிய ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக, இதற்கு முன்னர் மேற்கொண்ட ஆய்வுகளில் போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை எனவும், மேலதிக ஆய்வுகள் செய்யப்பட வேண்டும் எனவும் உலக சுகாதார அமைப்பு (World Health Organisation) குறிப்பிட்டிருந்தது.

# இது கருத்துச் சுதந்திர மறுப்பா?

சீனாவில் ஏறத்தாழ 3,300 வரையிலான தொலைக்காட்சி நிலையங்கள் இயங்குகின்றன. அதேவேளையில் 2,000 வரையிலான செய்திப் பத்திரிகைகளும், 10,000 வரையிலான சஞ்சிகைகளும் வெளிவருகின்றன.
சீனாவில் கருத்துச் சுதந்திரம் இல்லை எனக் கூப்பாடு போடும் மேற்கத்தைய நாடுகளில் இவ்வளவு தொகை தொலைக்காட்சி நிலையங்களும், வெளியீடுகளும் இருக்கின்றனவோ என்னவோ?

# உலகிலேயே உயரமானவர்கள் யார்?

டச்சு நாட்டு ஆண்களும், லாத்வியா நாட்டு பெண்களும் தான் உலகிலேயே உயரமானவர்கள் என்று புதிய ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

அதே சமயம், குவாட்டமாலா நாட்டு பெண்களும், கிழக்கு தைமோர் நாட்டு ஆண்களும் தான் உலகிலேயே குள்ளமானவர்கள் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

மனிதர்களின் உயரங்களில், மரபியல் தாக்கங்களால் சில மாற்றங்கள் ஏற்படலாம் எனினும் நல்ல சத்தூட்டம், சுத்தம் மற்றும் சுகாதாரம் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கிறது என லண்டன் இம்பிரியல் கல்லூரியின் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்கத்திய சமூகங்களில் மனிதர்கள் உயரமாக வளர்வது சராசரியாக உள்ளது. மேலும் ஆப்ரிக்காவின் சில இடங்களில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அவர்கள் கண்ட வளர்ச்சி குறைந்துள்ளது எனவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

உலகின் உயரமானவர்களாக கருதப்படும் டச்சு நாட்டவரின் சராசரி உயரம் 183 செ.மீ மற்றும் லாத்விய பெண்களின் உயரம் 170 செ. மீ, உலகில் குள்ளமானவர்களாக கருதப்படும் க்வாட்டமாலா பெண்கள் 150 செ.மீட்டர் உயரத்தை எட்டுவது அரிது எனவும் மேலும் கிழக்கு தைமோர் ஆண்களின் சராசரி உயரம் 160 செ.மீட்டர் ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குப்பைக்குள் குன்றிமணி!

அமெரிக்காவின் மிசூரி மாநிலத்திலுள்ள ஒரு தம்பதியினர் தவறுதலாக வீசியெறிந்த 5 இலட்சம் டொலர்கள் பெறுமதியான இரண்டு மோதிரங்களை, அந்நகரத்தின் குப்பை அகற்றும் தொழிலாளர்கள் தொன் கணக்கான குப்பைகளுக்கு மத்தியில் கண்டெடுத்துள்ளனர்.

# 256 வருடங்கள் வாழ்ந்த சீன மனிதர்

லி சிங்-யோன், சீனாவை சேர்ந்த இவர் உலகிலேயே அதிக வயது வாழ்ந்தவராக கருதப்படுகிறார். இவர் ஓர் மூலிகையாளர், தற்காப்பு கலைஞர் என்றும் அறியப்படுகிறார். இவரது பிறப்பை பற்றி இன்றுவரையும் சரியான தகவல்கள் கிடைக்கப்படவில்லை.

சிலர் இவர் 1736-ம் ஆண்டு பிறந்தார் எனவும், சிலர் வரலாற்று கூற்றுப்படி பார்க்கையில் இவர் 1677-ம் ஆண்டே பிறந்திருக்க வேண்டும் எனவும் கூறுகின்றனர். எப்படி வைத்து பார்த்தாலும் இவரது வயது 197 அல்லது 256- ஆக இருக்க வேண்டும்.

இரண்டில் எது இவரது வயதாக இருந்தாலும், இவர் தான் அதிக வயது வாழ்ந்த நபராக கருதப்படுவார். இவர் இறக்கும் முன், இவ்வளவு ஆண்டுகள் உயிர் வாழ்ந்ததற்கான இரகசியமும் கூறி சென்றிருக்கிறார்

## மூலிகையாளர்

பத்து வயதில் மூலிகையாளராக தன் துறையை தேர்ந்தெடுத்து பயணத்தை துவங்கிய லி சிங்-யோன். நாற்பது வருடங்கள் goji berries, lingzi, wild ginseng, he shou wu, gotu kola மற்றும் rice wine போன்ற மூலிகை உணவுகளை உண்டு வந்துள்ளார். இதையே இவர் நூறு வயது வரை கடைபிடித்து வந்தார் எனவும் கூறப்படுகிறது.

## சீன ராணுவம்

*1749-ம் ஆண்டு இவரது 71வது வயதில் இவர் சீன இராணுவத்தில் தற்காப்பு கலை பயிற்றுவிக்கும் நபராக சேர்ந்துள்ளார்.*

## குடும்பம்

இவர் 23 திருமணங்கள் செய்திருந்தார், இவருக்கு 200 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர் தான் உலகின் வயதான நபர் இல்லை என்றும், ஒருமுறை லீ ஏறத்தாழ 500வருடங்கள் வாழ்ந்த நபரை சந்தித்ததாக கூறியிருக்கிறார் எனவும் சிலர் தெரிவிக்கின்றனர்.

## Qigong பயிற்சி மற்றும் சிறப்பு மூலிகை டயட்

அந்த நபர் தான் இவருக்கு Qigong பயிற்சி மற்றும் சிறப்பு மூலிகை டயட் கற்பித்தார் எனவும், அதன் மூலமாக தான் இவர் அசாதாரண நீண்ட ஆயுள் வரை வாழ முடிந்தது எனவும் கூறப்படுகிறது.

## லீ கூறிய இரகசியம்

இறக்கும் முன்னர் லீ-யிடம் அவரது ஆயுள் இரகசியம் பற்றி கேட்டப்போது, ஆமை போல அமர வேண்டும், புறா போல நடக்க வேண்டும், நாய் போல உறங்க வேண்டும், இதயத்தை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும் என கூறியிருக்கிறார்.

## சீன அரசு கோப்புகள்

சீன அரசின் வரலாற்று கோப்புகளில், லீயின் 150வது (1827) மற்றும் 200வது (1877)பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவித்த விடயங்கள் இருக்கின்றன என கூறப்பட்டுள்ளன. இதை சீனாவின் செங்டு பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் வூ என்பவர் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

# மெகா திட்டம்!

அமெரிக்காவிலுள்ள வேர்ஜீனியாவுக்கும், ஐரோப்பாவிலுள்ள ஸ்பெயின் நாட்டுக்குமிடையே 4,100 மைல்கள் நீளமான கேபிள் (Cable) அமைப்பை உருவாக்குவதற்கு மைக்ரோசொப்ற், ஃபேஸ்புக் நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன.

# 'ஹரிஜன்' காந்தியின் வார்த்தை அல்ல!

"பக்தி யுகத்தைச் சேர்ந்த குஜராத் பெண் துறவி கங்காசதி. அவர் தன்னைக் கடவுளின் மகள் என்று குறிப்பிடக் கையாண்ட சொல் 'ஹரிஜன்'. தாழ்த்தப்பட்ட மக்களைக் 'கடவுளின் குழந்தைகள்' என்று அழைக்க அதைப் பயன்படுத்தினார் குஜராத் கவிஞர் நரசிம்ம மேத்தா. அந்தக் குறியீடு காந்திக்கு மிகவும் பிடித்துப்போனது. எனவே, 'ஹரிஜன்' என்ற தலைப்பில் ஒரு பத்திரிகையைத் தம் குரலாக வெளியிட்டு வந்தார்."

# யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே!


**மைத்திரி** – ரணில் தலைமையிலான தற்போதைய மேற்கத்தைய சார்பு, நவ – தாராளவாத அரசு ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து அதன் ஜனாதிபதியும், பிரதமரும், நாட்டின் அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் செய்து, இனப் பிரச்சினைக்கும், நாட்டின் ஏனைய சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு காணப்போவதாகச் சொல்லி வருகிறார்கள்.

மறுபக்கத்தில், அவர்கள் கூறுவதை மறுபேச்சில்லாமல் அப்படியே ஏற்கும்படியும், இந்த வருட முடிவுக்குள் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டுவிடும் என்றும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களான சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா போன்றவர்கள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி வருகின்றனர்.

இன்றைய மைத்திரி – ரணில் வலதுசாரி அரசைப் பதவிக்குக் கொண்டு வருவதில் வழக்கத்திற்கு மாறாக அவர்களுடன் இணைந்து செயல்பட்ட சில தமிழ் - சிங்களப் புத்திஜீவிகள், வெளிநாட்டுப் பணத்தில் மனித உரிமை பேசுவோர், அடிப்படைக் கொள்கைகளுக்குத் துரோகமிழைத்துவிட்டு வலதுசாரிகளுடன் கைகோர்த்த சில இடதுசாரிச் சந்தர்ப்பவாதிகள் போன்ற வகையறாக்களும், இன்றைய அரசு இனப் பிரச்சினை விடயத்தில் ஏதோ பெரிதாகப் 'புடுங்கி அடுக்கப்' போவதாக சோதிடம் கூறி வருகின்றனர்.

உள்நாட்டில் மட்டுமின்றி, வெளிநாடுகளில் வாழ்கின்ற புலி ஆதரவுக் குழுக்களும் முன்னைய மகிந்த அரசுக்கு எதிராக விடாப்பிடியாக 'சன்னதம்' ஆடியது போல, மைத்திரி அரசுக்கு எதிராக ஆடாமல் அடக்கி வாசித்து வருகின்றனர்.

தமிழ் நாட்டில் எடுத்ததிற்கெல்லாம் 'சிங்கள கொடுங்கோலர்களுக்கு' எதிராகக் கூச்சல் போட்டு, 'தமிழீழ தொப்புள் கொடி உறவுகளுக்காக' கண்ணீர் சிந்தி, வாள் சுழற்றிய சீமான், வைகோ, நெடுமாறன், ராமதாசு, திருமாவளவன் போன்ற 'தன்மானத் தமிழர்களும்' இலங்கையைப் பார்ப்பதை விடுத்து, கண்மூடி மௌன விரதம் அனுட்டிக்கின்றனர்.



இவர்கள் எல்லோரையும் ஒரு நேர்கோட்டில் கொண்டு வந்த, அந்தச் சர்வ வல்லமை பொருந்திய சர்வதேச சக்தி எது என்பதை ஆராய்வது அல்ல இந்தக் கட்டுரையின் நோக்கம்.

ஆனால் இன்றைய அரசின் தலைவர்கள் மட்டும் ஐ.தே.க. வழமையாகப் பின்பற்றும் தந்திரப் போக்கில் இருந்து மாறியதாகத் தெரியவில்லை. அவர்கள் மட்டுமின்றி, 'பன்றியோடு சேர்ந்த பசுக்கன்றும்….' எதையோ சாப்பிட்டது என்று சொல்வது போல, இன்றைய வலதுசாரி அரசுடன் பதவி மோகத்துக்காகக் கூட்டுச் சேர்ந்துள்ள சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரும் ஐ.தே.கவின் கீழ்த்தரமான தந்திரத்தில் மூழ்கிப் போயுள்ளனர்.

முன்னைய மகிந்த அரசு செய்தது போல, உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் ஒரே கொள்கையைப் பேசாது, வடக்குக் கிழக்கில் ஒரு பேச்சும், சிங்கள மக்கள் மத்தியில் செல்லும் போது இன்னொரு பேச்சும், சர்வதேச சமூகத்திற்கு வேறொரு பேச்சுமாக இன்றைய அரச தலைவர்கள் நாக்கைப் புரட்டி புரட்டிக் கபடத்தனமாகப் பேசி வருகின்றனர்.

புதிய அரசியல் அமைப்பின் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் போவதாகச் சொல்லி வருபவர்கள், தீர்வு என்ன அடிப்படையில் - அதாவது சமஸ்டி முறையிலா, பிராந்திய சுயாட்சி முறையிலா, மாகாணசபை முறையிலா அல்லது ஒற்றையாட்சிக்கு உள்ளேயா – எப்படி இருக்கப்போகின்றது என்பதைக் கூறாமல் இரகசியம் பேணுகின்றனர். இதனால் 'சமஸ்டி அரசியல் அமைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு நாடு பிளவுபடப் போகின்றது' என்ற அச்சத்தை சில சக்திகள் சிங்கள மக்கள் மத்தியில் கிளப்பிவிட்டுள்ளனர். இதனால், வழமைபோல சிங்கள மக்களின் எதிர்ப்பைக் கிளப்பிவிட்டு, இனப் பிரச்சினைக்கு ஒரு சாதாரண தீர்வுகூட வர முடியாத நிலையை இன்றைய அரசு திட்டமிட்டு ஏற்படுத்திவிட்டிருக்கிறது.

இந்த உண்மையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னை அண்மையில் சந்தித்த அரச சார்பற்ற பிரதிநிதிகளிடம் வெளிப்படையாகவே கூறிவிட்டார். (உண்மையைக் கக்கியதற்காக அவருக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்) ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் கிளை போல, ஜனநாயக மக்கள் முன்னணி என்ற பெயரில் கட்சி ஒன்றை நடாத்தி வருபவரும், இன்றைய அரசில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் (அதிகாரம் எதுவுமற்ற) அமைச்சராகப் பதவி வகிப்பவருமான மனோ கணேசனின் ஏற்பாட்டில் அண்மையில் பிரதமர் ரணிலை அலரி மாளிகையில் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் சந்தித்தபோதே, பிரதமர் தென்னிலங்கை மக்கள் மத்தியில் உள்ள நிலைமையை (உண்மையில் அவரது அரசின் விருப்பத்தை) புட்டு வைத்திருக்கிறார்.

அந்தச் சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த ரணில், "நல்லிணக்கம், நிலைமாறு நீதிப் பொறிமுறை மற்றும் சிறுபான்மையினருக்கான தீர்வுகளை வழங்குவது தொடர்பான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு தென் பகுதியிலுள்ள சிங்கள மக்கள் தொடர்ந்தும் எதிரான நிலைப்பாட்டிலேயே இருப்தாக" தெரிவித்திருக்கிறார். இதன் மூலம் இன்றைய அரசு இனப் பிரச்சினைக்கு

ஒருபோதும் தீர்வு எதனையும் காணப் போவதில்லை என்ற பட்டவர்த்தனமான உண்மையை ரணில் சூசகமாக வெளியிட்டிருக்கிறார். ரணிலின் இந்தக் கருத்து புதிதானதோ அல்லது ஆச்சரியத்துக்குரியதோ அல்ல.

ஏனெனில், ஐ.தே.க. கடந்த காலங்களில் தான் செய்த ஒவ்வொரு இனவாதச் செயலுக்கும் மக்கள் மேல்தான் பழியைப் போட்டு வந்திருக்கிறது. உதாரணமாக, 1958, 1977, 1981, 1983 ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட இன வன்செயல்களுக்கு பின்னணியில் நின்று செயல்பட்ட சூத்திரதாரி ஐ.தே.கவே. அதேபோல, இனப் பிரச்சினைத் தீர்வுக்காக கொண்டு வரப்பட்ட பண்டா — செல்வா உடன்படிக்கை, 1987இல் செய்யப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கை, 2000ஆம் ஆண்டில் சந்திரிக அரசு கொண்டு வந்த தீர்வுத் திட்டம், என்பனவற்றை நடைமுறைக்கு வரவிடாமல் தடுத்து நிறுத்திய கைங்கரியத்தைச் செய்ததும் ஐ.தே.கவே.

ஆனால், இவற்றைச் செய்த நேரங்களில் எல்லாம், இவற்றில் தனது பின்னணியை மறைத்து, சிங்கள மக்களே அவற்றைத் தன்னெழுச்சியாகச் செய்தார்கள் என ஐ.தே.க. பொய்யுரைப்பது வழமை. அந்தத் தந்திரத்தையே 'அரசியல் குள்ளநரி' என வர்ணிக்கப்படும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் மருமகனான ரணிலும் இப்பொழுது செய்யப் பார்க்கிறார். அதாவது, தாம் இனப் பிரச்சினையைத் தீர்க்கத் தயாராக இருப்பது போலவும், ஆனால் சிங்கள மக்கள் தொடர்ந்தும் அதற்கு எதிராகவே இருக்கிறார்கள் எனவும், மனோ கணேசன் கூட்டிச் சென்ற அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் ரணில் கூறியதின் அர்த்தம் இதுதான்.

மைத்திரி — ரணில் அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு, அரசியலில் அனுபவப்பட்டவர்களால் முன்னரே எதிர்பார்த்த விடயம்தான். ஏனெனில், தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் சமஸ்டித் தீர்வே தமது எதிர்பார்ப்பு என்று கூறிய சந்தர்ப்பங்களில் எல்லாம், தனது அரசு சமஸ்டித் தீர்வுக்கு ஒருபோதும் சம்மதிக்காது என ரணில் உடனுக்கு உடனேயே பதில் அளித்து வந்திருக்கிறார். அதேபோல, ஜனாதிபதி மைத்திரியும் தனது அரசு ஒற்றையாட்சி கொண்ட அரசாகவே இருக்கும் என ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கூறியிருக்கிறார். இந்த அரசின் ஜனாதிபதியும், பிரதமரும் அப்படிக் கூறிய பின்னர், இந்த வருட முடிவுக்குள் இனப் பிரச்சினைக்கு இன்றைய அரசு தீர்வு காணும் என தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ் மக்களைப் பார்த்துக் கூறுவது சுத்த மோசடித்தனம் தவிர வேறல்ல.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை, அவர்களது தலைவர்களால் தொடர்ந்து ஏமாற்றப்படுவதே வரலாறாக இருக்கிறது. அவர்களது தலைவர்கள் இனப் பிரச்சினைத் தீர்வுக்குக் கிடைத்த சந்தாப்பங்களை எல்லாம் தமது அரசியல் இருப்புக்காக திட்டமிட்டு நழுவ விட்டவர்கள் என்பதை முதலில் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் புதிய தலைமையையும், புதிய கொள்கையையும் உருவாக்குவதை நோக்கி அவர்கள் செல்வது அவசியம். அவ்வாறு அவர்கள் செய்யத் தவறினால், தொடர்ந்தும் துன்பத்தில் உழல்வதைத் தவிர வேறு வழி இல்லை.

**– சுப்பராஜன்**

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

என்பனவும் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளன" எனக் குறிப்பிட்டார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 'தகவல் அறியும் சட்ட மூலம்' பற்றி கருத்துரைத்த கொல்லுரே, "தகவல் அறியும் சட்ட மூலத்தின்படி அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது நிதி வளங்களையும், தமது நடவடிக்கைகளையும் பற்றி பகிரங்கப்படுத்த வேண்டும். ஆனால் இதுவரை காலமும் அப்படிச் செய்ததில்லை. தமக்குக் கிடைக்கும் பெருந்தொகையான வெளிநாட்டு நிதி பற்றி அவை தெரிவிக்காததுடன், அந்த நிதியை மக்களின் தேவைகளுக்கு உரிய முறையில் பயன்படுத்துவதும் இல்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும் என வலியுறுத்திக் கூறியுள்ளார்" எனத் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர், கொல்லுரேயின் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதுடன், அரசாங்கம் மருந்துகளின் விலை பற்றி சரியான கொள்கை ஒன்றைக் கடைப்பிடிக்காததினால், அவற்றின் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன எனக் குறிப்பிட்டனர்.

அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டால் ஏழை நோயாளிகள் அதிக விலை கொடுத்து வெளியில் மருந்துகளை வாங்க வேண்டிய அவல நிலைக்கு உள்ளாகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் கிளைகளை நாடு முழுவதும் திறந்து, பொது மக்களுக்கு குறைந்த விலையில் மருந்துகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என வலியுறுத்திக் கூறினர்.

**-வீரசிங்கம்**

"வரலாற்றின் உந்து விசையைப் பற்றிய மாபெரும் விதியை முதன்முதலில் கண்டுபிடித்தவர் மார்க்ஸ். வரலாற்று ரீதியான அனைத்துப் போராட்டங்களும், அவை அரசியல், மத, தத்துவஞான அல்லது வேறு ஏதாவதொரு சித்தாந்தத் துறைக்குள்ளாக முன்னேறிய போதிலும், உண்மையில் அவை அநேகமாக சமூக வர்க்கங்களின் போராட்டங்களின் தெளிவான வெளியீடுகள் மட்டுமே, இந்த வர்க்கங்கள் இருப்பதும் அதன் காரணமாக இவற்றுக்கிடையே ஏற்படுகின்ற மோதல்களும் கூட அவற்றின் பொருளாதார நிலைமையின் வளர்ச்சியின் தரத்தினால், அவற்றின் உற்பத்தி முறையினாலும் அதனால் நிர்ணயிக்கப்படுகின்ற பரிவர்த்தனை முறையினாலும் நிலைப்படுத்தப்படுகின்றன என்பது அந்த விதியாகும். இயற்கை விஞ்ஞானத்தில் சக்தியின் உருமாற்றம் பற்றிய விதிக்கு உள்ள அதே முக்கியத்துவம் வரலாற்றில் இந்த விதிக்கு உண்டு."

**லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர் - எங்கெல்சின் முன்னுரை**

# அரசாங்கத்தை மிரள வைத்த பாதயாத்திரை!



**ஒ**ன்றுபட்ட எதிரணியினர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் கண்டியிலிருந்து கொழும்பு வரை மேற்கொண்ட மூன்றுநாள் பாதயாத்திரை பெரும் வெற்றியளித்தது என்று சொல்ல முடியாவிட்டாலும், மைத்திரி – ரணில் அரசை ஒரு கலக்கு கலக்கி விட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

அரசாங்கம் பலமான அழுத்தங்களைப் பிரயோகித்து பாதயாத்திரை பற்றிய செய்திகளை ஊடகங்களில் வராமல் பார்த்துக் கொள்வதற்கு பெரும் பிரயத்தனம் எடுத்தது. ஆனால், மறுபக்கத்தில் ஜனாதிபதியும், பிரதமரும், எப்பொழுதும் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பயன்படுத்தி அரசியல் எதிராளிகளைத் திட்டும் ஐ.தே.கவின் லக்ஸ்மன் கிரியெல்ல போன்றவர்களும் பாதயாத்திரையை அடிக்கடி வசைபாடியதின் மூலம், தம்மை அறியாமலேயே பாதயாத்திரைக்கு போதிய பிரச்சார முக்கியத்துவத்தைக் கொடுத்தனர். பாதயாத்திரைக்கு மக்கள் ஆதரவு இல்லை என்றால், அவர்கள் ஏன் இவ்வளவு தூரம் துள்ளிக் குதிக்க வேண்டும் என்ற நியாயமான கேள்வி இருக்கிறது.

அதுமட்டுமின்றி, பாதயாத்திரை கண்டி நகரிலிருந்து ஆரம்பிக்கப்படுவதற்குத் திட்டமிட்டிருந்த போதும், மக்களின் ஜனநாயக உரிமையை மறுக்கும் வகையில் அரசாங்கக் கட்சியினர் நீதிமன்றத்தில் அதற்கு எதிராக மனுத் தாக்கல் செய்து, கண்டியிலிருந்து பாதயாத்திரையை ஆரம்பிக்க முடியாதபடி தடை உத்தரவொன்றைப் பெற்றுக் கொண்டனர். அதேபோன்ற ஒரு உத்தரவை மாவனல்லை நகருக்குள் பாதயாத்திரையினர் நுழையக்கூடாது என்றும் நீதிமன்றத்தின ஊடாகப் பெற்றுக் கொண்டனர்.

## இக்பால் இத்திரீஸ்

கேகாலை நகரிலும் அவ்வாறு ஒரு உத்தரவைப் பெற அரசாங்க அடிவருடிகள் முயன்றபோதும், அதை ஏற்காத நீதிமன்றம், ஒரேயொரு பாதையால் மட்டும் பாதயாத்திரை செல்ல அனுமதி அளித்தது. நித்தம்புவிலும் அவ்வாறான ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டதாயினும், அந்தப் பகுதி சந்திரிகவின் செல்வாக்குப் பிரதேசமாக இருந்த போதிலும், அங்குள்ள நீதிபதி நித்தம்புவ நகருக்குள் பாதயாத்திரை செல்வதற்குத் தடை விதிக்க மறுத்துவிட்டார். (இந்த இலட்சணத்தில் இலங்கையில் நீதித்துறை சுதந்திரமாகவும், பக்கச்சார்பின்றியும் செயல்படுகிறது என்றால், அதைச் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளுமா?)

இதுதவிர, அத்தனைகலையிலுள்ள பண்டாரநாயக்கவின் சமாதியை பாதயாத்திரையினர் தாக்கப் போகிறார்கள் என்ற ஒரு புரளியை சந்திரிக கிளப்பிவிட்டு, அச்சமாதிக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கும்படி கேட்டிருந்த போதிலும், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. பதிலுக்கு அவரது சமாதியைக் கடக்கும் போது, பாதயாத்திரையினர் கோசங்கள் எதுவும் எழுப்பாமல் அமைதியாகச் சென்றதுடன், பண்டாரநாயக்கவுக்கு மரியாதை செலுத்தும் விதமாகத் தாம் அணிந்து சென்ற தொப்பிகளையும் அகற்றிவிட்டே சென்றனர். பண்டாரநாயக்கவின் சமாதியைத் தாக்கும் அளவுக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரான எதிரணியினர் முட்டாள்கள் அல்ல என்று சந்திரிகவுக்குத் தெரிந்திருந்தும், இந்தக் கீழ்த்தரமான புரளியைக் கிளப்பி அரசியல் இலாபம் தேட முயன்றிருக்கிறார்.

பாதயாத்திரையில் இலட்சக்கணக்கானோர் கலந்து கொள்ளவில்லை என்பது உண்மையே. இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்து ஒன்றரை வருட காலத்துக்குள் மக்களின் தீவிரமான வெறுப்பைச் சநதித்திருக்க முடியாது என்பது எதிரணியினருக்கும் நன்கு தெரியும். ஆனாலும், எதிர்பார்த்ததை விட, இந்த 'நல்லாட்சி' அரசாங்கம் மக்களின் வெறுப்பை வெகு வேகமாகச் சம்பாதிக்க ஆரம்பித்துள்ளது. அதனால் இலட்சக்கணக்கானோர் கலந்து கொள்ளாவிடினும் பல்லாயிரக்கணக்கானோர் பாதயாத்திரையில் கலந்து கொண்டனர். ஆனால், பாதயாத்திரை சென்ற வீதியின் இருமருங்கும் கூடிய

இலட்சக்கணக்கான மக்கள் பாதயாத்திரைக்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர். எதிர்காலத்தில் அரசுக்கு எதிராக மக்கள் பெரிய அளவில் அணி திரளப்போவதை அது கட்டியம் கூறுவதாக இருந்தது.

பாதயாத்திரையின் முடிவில் கொழும்பில் பிரமாண்டமான பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்துவதற்கும் எதிரணியினர் தீர்மானித்திருந்தனர். அதற்காக ஹைபார்க் மைதானத்தையும் தெரிவு செய்திருந்தனர். ஆனால் அரசாங்கம் அதைத் தடுப்பதற்காக கொழும்பு மாநகர சபையின் மூலம் அந்த மைதானத்தில் சில குழிகளைத் தோண்டிவிட்டு, மைதானத்தில் திருத்த வேலைகள் நடைபெறுவதாகவும், எனவே அதில் கூட்டம் எதுவும் நடாத்த முடியாது எனவும் அறிவித்தது. இதில் நகைச்சுவையான விடயமென்னவெனில், அந்த மைதானம் மகிந்த ஆட்சிக் காலத்தில்தான் நல்ல முறையில் திருத்தி அமைக்கப்பட்டிருந்தது.

அத்துடன், வேறு சில மைதானங்களில் எதிரணியினர் கூட்டம் நடத்தலாம் என்ற அச்சத்தில் அரசாங்கம் அந்த மைதானங்களிலும் குழிகளைத் தோண்ட ஆரம்பித்துவிட்டது. அதுமாத்திரமல்லாமல், அதன் பின்னர் கொழும்பு நகரப் பகுதிகளில் பல மைதானங்களில் எதிர்காலத்தில் கூட்டங்கள் எதுவும் நடாத்த முடியாது எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையைப் பார்க்கும்போது, சீப்பை ஒழித்து வைத்துவிட்டு கலியாணத்தை நிறுத்த முயன்ற கதைதான் நினைவுக்கு வருகிறது.

ஆனால், அரசாங்கம் தான் தோண்டிய குழியில் தானே விழுந்துகொண்ட நிலைமைதான் இறுதியில் ஏற்பட்டது. நாட்டில் மகிந்தவின் எதேச்சாதிகார ஆட்சியை ஒழித்துக்கட்டிவிட்டு நல்லாட்சியைக் கொண்டு வரப்போவதாகச் சொல்லி ஆட்சிபீடம் ஏறிய மைத்திரி – ரணில் அரசு, சாதாரணமான அகிம்சை அடிப்படையிலான அமைதியான பாதயாத்திரையையே பொறுக்க முடியாமல் அதைச் சீர்குலைப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளும், பாதயாத்திரை மேற்கொண்டவர்கள் மீது பல விதமான அவதூறுச் சேற்றை வாரி இறைத்த நிலைமையும், இந்த அரசாங்கத்தின் ஜனநாயக முகமூடியைத்தான் கிழித்தெறிய உதவியுள்ளது.

அரசாங்கத்தின் இந்தவிதமான நடவடிக்கைகள், எதிர்காலத்தில் அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழப்போகும் மக்களையும், அவர்கள் சார்பாகக் குரல் எழுப்பப்போகும் ஜனநாயக எதிரணிச் சக்திகளையும், பாசிச நடவடிக்கைகளின் மூலம் அடக்கியொடுக்கப் போவதற்கான முன்னேற்பாட்டு ஒத்திகையாகவே காட்சியளிக்கின்றன.

# திரிகோணமலையில் அமெரிக்க இராணுவத் தளம்?

"திரிகோணமலை துறைமுகத்தில் அமெரிக்கா இராணுவத்தளம் ஒன்றை அமைப்பதற்கு இன்றைய மைத்திரி – ரணில் அரசாங்கம் அனுமதி அளிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. அத்துடன், அங்கு அமெரிக்காவின் ஏழாவது கடற்படையையும் தங்குவதற்கு அனுமதி அளிக்க உள்ளது. இதன்மூலம் நமது நாட்டின் இறைமைக்குப் பெரும் பங்கம் ஏற்பட்டுள்ளது."

இவ்வாறு எச்சரிக்கை செய்திருக்கிறார் லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண. அண்மையில் கொழும்பு பொரளையில் அமைந்துள்ள டாக்டர் என்.எம்.பெரேரா நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே முன்னாள் அமைச்சரான விதாரண இவ்வாறு கூறியிருக்கிறார். அங்கு அவர் மேலும் கூறுகையில்:

"சீனா இலங்கைக்கு ஆறு சதவீத வட்டிக்கு கடன் வழங்குவதற்கு முன் வந்தது. ஆனால் அரசாங்கம் அதைவிடக் கூடுதலான 12 முதல் 14 வீதமான வட்டிக்கு சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெறுவதற்குத் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகளால், நேரடி மற்றும் மறைமுக வரிகள் அதிகரிக்கப்பட்டு, மக்கள் மீது மேலும் சுமைகள் ஏற்றப்படவுள்ளன. பொதுமக்களைப் பார்த்து வயிற்றுப்பட்டியை இறுக்கச் சொல்லும் இந்த அரசாங்கம், அதேநேரத்தில் அமெரிக்காவிடம் இருந்து பாகிஸ்தான் ஊடாக 400 மில்லியன் டொலர் பெறுமதியான ஜெற் போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுள்ளது."

எனக் குறிப்பிட்டார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துக்கூறிய ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார,

"அரசாங்கம் அரச சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பதற்கு முயன்று வருகிறது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு இடதுசாரிகளான நாங்கள் சகல வழிகளிலும் முயற்சிப்போம்.

அதுமட்டுமின்றி, வெளிநாடுகளின் தேவைகளுக்காக அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் செய்து, இலங்கையை சமஷ்டி அமைப்புள்ள ஒரு நாடாக மாற்றும் முயற்சிகளிலும் அரசாங்கம் இறங்கியுள்ளது. எம்மைப் பொறுத்தவரையில், ஒன்றுபட்ட நாட்டுக்குள் அதிகாரங்கள் பகிரப்படுவதையே நாம் ஆதரிக்கின்றோம்." எனக் குறிப்பிட்டார்.

# ஜனாதிபதிக்கு துட்டு, கல்விக்கு வேட்டு!

2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செலவுக்கென ஒதுக்கப்பட்ட நிதி 320 சத விகிதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அதாவது ஒரு நாளைக்கு அவரது செலவுக்கென 20 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதேநேரத்தில் கல்விக்கென ஒதுக்கப்பட்ட தொகை 57.6 சத விகிதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

'நல்லாட்சி' செய்யவென மக்களிடம் வாக்கு கேட்டு வந்தவர்கள், மக்கள் மீது நாளுக்கு நாள் வரிச் சுமைகளை அதிகரித்துக் கொண்டு, தமது தேவைகளுக்காக மக்களின் வரிப்பணத்தை அளவுக்கு அதிகமாகச் சூறையாடுவது எந்தவிதத்தில் நியாயம் என பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# அம்பலாங்கொட சொல்லும் சேதி என்ன?

"நல்லாட்சியை 5 வருடங்களுக்கு ஒருவராலும் உசுப்ப முடியாது" என ஜனாதிபதி மைத்திரியும், பிரதமர் ரணிலும் மேடைகள் தோறும் முழங்கி வருகின்றனர். ஆனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக அரசாங்கத்தில் அமைச்சு பதவி வகிக்கும் அக்கட்சியின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரான எஸ்.பி.திசநாயக்க அண்மையில் முக்கியமான கருத்து ஒன்றைச் சொல்லியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சிறீ.ல.சு.கட்சியை விட்டுச் சென்று புதிய கட்சி ஆரம்பித்தால் செல்லாக்காசாகிப் போவார் என்று குறிப்பிட்ட எஸ்.பி, அதேவேளையில் இன்று நாட்டில் உள்ள தலைவர்களில் மகிந்தவுக்கே சாதாரண மக்கள் மத்தியில் அபரிமிதமான செல்வாக்கு உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியையும், சுதந்திரக் கட்சியையும் மக்கள் வெறுக்க ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எப்போதும் வெளிப்படையாகப் பேசும் எஸ்.பியின் கூற்றை நிரூபிப்பது போல அண்மையில் நடைபெற்ற தேர்தல் ஒன்றின் முடிவு அமைந்துள்ளது.

அண்மையில் அம்பலாங்கொட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 23 கிளைகளுக்குமான தேர்தல் நடைபெற்றது. இதில் மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி, ஐ.தே.க., சுதந்திரக் கட்சி என்பன தனித்தனியாகக் களம் இறங்கின. முடிவுகள் வெளியான போது கூட்டு எதிரணி 47 உறுப்பினர்களையும், ஐ.தே.க 25 உறுப்பினர்களையும், சுதந்திரக் கட்சி 12 உறுப்பினர்களையும் பெற்றது தெரிய வந்தது. அதாவது 2015 ஜனவரி 08 ஜனாதிபதித் தேர்தலின் போது கூட்டுச் சேர்ந்து வெற்றி பெற்ற மைத்திரி – ரணில் அணிகள் இரண்டும் சேர்ந்து பெற்ற உறுப்பினர் தொகை கூட்டு எதிரணிக்கு கிட்டவும் வரவில்லை.

இதில் இன்னொரு சுவாரசியமான விடயமென்னவெனில், ஜனாதிபதி மைத்திரிக்கு நெருக்கமானவரான தென் மாகாண முதலமைச்சர் சான் விஜேய சில்வா அம்பலாங்கொடவைச் சேர்ந்தவர். அவர் இந்தத் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் வெற்றிக்காக களத்தில் நாட்கணக்காக தங்கி நின்று வேலை செய்தார். ஆனால் அவரது சொந்த ஊரில் நடந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைத் தேர்தலில் கூட கூட்டு எதிர்க்கட்சி 7 உறுப்பினர்களையும், ஐ.தே.க 2 உறுப்பினர்களையும் பெற்ற அதேநேரத்தில், சுதந்திரக் கட்சியிலிருந்து ஒரு உறுப்பினர் தானும் வெற்றி பெறவில்லை.

இந்தத் தேர்தல் ஒரு சாதாரண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலாக இருந்த போதிலும், சாதாரண அடிமட்ட மக்கள் பங்குபற்றிய தேர்தல் ஆகும். ஆனாலும் இந்தத் தேர்தல் முடிவு ஒரு உண்மையை உலகிற்கு முரசறைந்து தெரிவித்துள்ளது. அதாவது இன்றைய நிலையில் நாட்டில் ஒரு தேர்தல் நடந்து, அதில் ஐ.தே.கவும், சுதந்திரக் கட்சியும் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டாலும், மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினர் தனி அணியாகப் போட்டியிட்டால் அவர்களே வெற்றி பெறுவார்கள் என்ற உண்மையே அது.தமக்கு தோல்வி நிச்சயம் என்று

கருதியபடியால்தான், 'நல்லாட்சி' அரசாங்கம் கடந்த 20 மாதங்களாக உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்தாமல் இழுத்தடித்து வருகிறது. அடுத்த வருட முற்பகுதியில் நடாத்துவோம் என்று சொன்னவர்கள், இப்பொழுது அடுத்த ஆண்டு யூனில்தான் நடாத்துவோம் என்கிறார்கள். காலம் போகப்போக நல்லாட்சி அரசாங்கத்தின் முகத்திரை மேலும் மேலும் கிழிந்து கந்தலாகும் என்பதை அவர்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை என்பதே இதன் அர்த்தம்.


**நீர்வை பொன்னையனின்**

**புதிய சிறுகதைத் தொகுதி**

**"பாஞ்சான்"**

வெளிவந்துள்ளது!

பிரதிகள் வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும்:

**இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்**

Sri Lanka Progressive Art & Literature Association
18, 6/1 Collingwood Place
Colombo – 6
E-Mail: kailashpath@yahoo.com

**முன்பக்கத்தொடர்ச்சி...**

அதுமட்டுமின்றி, 1977இல் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கவின் அப்போதைய தலைவரும், ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாருமான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தனக்கு எதிரான எதிர்க்கட்சிகள், தொழிற்சங்கங்கள் என்பனவற்றை அடக்கியொடுக்கியதுடன், முன்னாள் பிரதமரும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான சிறீமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமையையும் பறித்தார்.

அந்தப் பாரம்பரியத்தையே இன்றைய ஐக்கியக் கட்சிப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்கிறார் போலத் தெரிகிறது. ஆனால் இம்முறை ஒரு வித்தியாசமான விடயம் என்னவெனில், வழமையாக ஐ.தே.க. அதிகாரத்துக்கு வரும் நேரங்களில் தனித்தே தனது அரசியல் எதிரிகளான சிறீ.ல.சு.கட்சியையும், இடதுசாரிக் கட்சிகளையும் பழிவாங்குவது வழக்கம். இந்தத் தடவை ஐ.தே.க. தனித்து இதைச் செய்யவில்லை. முன்னாள் ஜனாதிபதியும், சிறீ.ல.சு.கட்சி முன்னாள் தலைவியுமான சந்திரிகவையும், இந்நாள் ஜனாதிபதியும், சிறீ.ல.சு.கட்சி தலைவருமான மைத்திரியையும் சேர்த்துக் கொண்டே செய்கிறது.

ஆனால் சர்வாதிகாரி, ஊழல் மோசடிக்காரர் என இன்றைய அரசாங்கத் தலைவர்களால் வர்ணிக்கப்படும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த, தனது அரசியல் எதிரிகள் மீது இப்படியான அரசியல் பழிவாங்கல்கள் எதிலும் ஈடுபட்டார் என்பதற்கு ஓர் உதாரணத்தைக்கூட காட்டுவது சிரமம்.

முதலில் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில், இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்ததே நேர்மையான வழிமுறைகளில் அல்ல என்பதையே. இன்றைய அரசாங்கத்தை சதித்தனமான முறையில் பதவிக்குக் கொண்டு வந்ததில் சில உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் கைகள் பின்னணியில் இருந்து செயல்பட்டுள்ளன என்பது இரகசியமான விடயமல்ல.

உள்நாட்டைப் பொறுத்தவரை நீண்டகாலம் அதிகாரப் பசியுடன் காத்திருந்த ஐ.தே.க. அதிகாரத்துக்கு வருவதற்கு துடித்துக் கொண்டிருந்தது. அதன் விருப்பத்தை நிறைவேற்ற அதன் வெளிநாட்டு எஜமானர்களான ஏகாதிபத்திய சக்திகள் வியூகம் வகுத்துக் கொடுத்தன. அத்துடன் வெளிச் சூழ்நிலைகளையும் உருவாக்கிக் கொடுத்தன.

அதற்கு உடந்தையாக புதிதாக ஏகாதிபத்திய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டவரும், மகிந்த மீது தனிப்பாட்ட குரோதம் கொண்டிருந்தவருமான சந்திரிக செயல்பட்டு, தனது சொந்தக் கட்சியையே உடைத்து, மைத்திரியை 'பொது வேட்பாளர்' என்ற மகுடத்தின் கீழ் ஜனாதிபதி வேட்பாளராக்கி ஐந்தாம் படை வேலையைச் செய்தார். தனக்கென தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல் எதுவுமற்ற மைத்திரி, ஐ.தே.கவினதும், சந்திகவினதும் சதி வலையில் சிக்கியதற்கு தனக்கு மகிந்த ஆட்சியில் பிரதமர் பதவி கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் காரணமாக அமைந்தது.

சர்வதேச அரங்கைப் பொறுத்தவரையில், மகிந்த அரசாங்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டாலும், அவரது அரசு சீனா, ரஸ்யா, கியூபா, ஈரான், லிபியா, வெனிசூலா, வியட்நாம், பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் நெருக்கமான நட்புறவு கொண்டிருந்த காரணத்தாலும், அவரது அந்த நிலைப்பாடு தமது பூகோளரீதியிலான நலன்களுக்கு இடையூறாக இருக்கின்றது எனக் கருதிய அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளும், இந்தியாவும் அவரை எப்படியும் பதவியில் இருந்து இறக்க வேண்டும் எனக் கருதி வேலை செய்தன.

இவற்றின் ஒட்டுமொத்தமான கூட்டு வேலையின் விளைவே 2015 ஜனவரி 8 ஆட்சி மாற்றம். ஆட்சி மாற்றங்கள் ஏற்படுவதென்பது ஜனநாயக ஆட்சி முறையில் இயல்பானது. ஆனால் அந்த ஆட்சி மாற்றம் மக்களுக்கு எதிரானதாகவும், அரசியல் எதேச்சாதிகாரமாகவும் மாறும்போது அந்த அரசாங்கம் ஆட்சி செய்வதற்கான தார்மீக உரிமையை இழந்துவிடுகிறது. அதுதான் இபபொழுது இலங்கையில் நிகழ்ந்துள்ளது.

'நல்லாட்சி' வழங்கப் போவதாகக்கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் அதற்கு எதிர்மாறாகச் செயல்படுகிறார்கள்.

முன்னைய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளன.

விலைவாசியும், வேலை இல்லாத் திண்டாட்டமும் கட்டுக்கடங்காமல் ஏறிச் செல்கின்றன.

அரச பொதுச் சொத்துக்களைத் தனியார் கைகளுக்கு மாற்றும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

கல்வி, வைத்தியத்துறையை தனியார் மயமாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மத்திய வங்கி போன்ற நாட்டின் தலைமை நிதி நிறுவனங்களியே அரச உயர்மட்டத்தின் ஆதரவுடன் பல போடி ரூபா நிதி மோசடி நடைபெற்றுள்ளது.

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுடன் இலங்கையின் பொருளாதார நலன்களையும், இறைமையையும் பாதிக்கும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளதுடன், இதுவரை காலமும் இருந்த நாட்டின் அணிசேராக் கொள்கை மிக வேகமாக ஏகாதிபத்திய சார்பாக மாற்றப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதியின் கூற்றே அரசாங்கம் அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுகிறது என்ற உண்மையை வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது.

இப்படிப் பல விடயங்களைப் பார்க்கையில் இந்த அரசாங்கம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத, அதற்குப் பதிலாக மக்களின் விரோதியாகவும், நாட்டுக்கு விரோதமாகவும் செயல்படுவது பட்டவர்த்தனமாக வெட்டவெளிச்சமாகியுள்ளது.

மக்களின் ஆதரவை மட்டுமின்றி, மக்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியின் ஆதரவையும் இழந்துள்ள பிரதமர் ரணில் விக்கிலமசிங்க தலைமையிலான இன்றைய அரசு பதவியில் தொடர்வதற்கான தார்மீக உரிமையை இழந்துள்ளது.

எனவே, மக்களினதும், நமது தாய்நாட்டினதும் நலன்களை உண்மையிலேயே முன்நிறுத்தக்கூடிய அரசொன்றை மக்கள் மீண்டும் தெரிவு செய்வதற்காக, இன்றைய அரசு தானாகவே விலகிக் கொண்டு வழிவிடுவதே ஜனநாயக நெறிமுறையாகும். அப்படி ஜனநாயகத்தை மதித்து இன்றைய அரசு பதவி விலக மறுப்பின், ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இன்றைய அரசைப் பதவி நீக்கம் செய்துவிட்டு, புதிதாகத் தேர்தலுக்கு உத்தரவிட்டு மக்களின் இறைமையை நிலைநாட்ட உதவ வேண்டும். அதன் மூலம் அவர் சதிகாரர்களின் தூண்டுதலால் நாட்டைத் தவறான வழியில் இட்டுச் சென்றதற்கு பிராயச்சித்தம் தேட முடியும்.

இது ஒன்றே மூழ்கும் கப்பலாக மாறிக் கொண்டிருக்கும் நாட்டையும், மக்களையும் மீட்பதற்கான இன்றுள்ள ஒரே வழியாகும்.

# பிலிப்பைன்ஸ் – அமெரிக்க உறவுகளில் விரிசல்!

**தெ**ன் கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான பிலிப்பைன்சில் மூன்று மாதங்களுக்கு முன்னர் புதிதாக ஜனாதிபதி பதவி ஏற்ற ரொட்றிக்கோ டுற்ரேர்ரே (Rodrigo Duterte) எடுத்து வரும் சில அதிரடியான நடவடிக்கைகள் அவருக்கும் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகள், ஐ.நா. மனித உரிமை அமைப்புகள் என்பனவற்றுக்கும் இடையே ஒரு மோதல் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

டுற்ரேர்ரே பதவி ஏற்ற நாள் முதல் பிலிப்பைன்சில் தலை விரித்தாடும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக பிலிப்பைன்ஸ் பொலிசார் கடந்த மூன்று மாதங்களாக போதைப் பொருள் விற்பனையாளர்கள், அதனைப் பயன்படுத்துபவர்கள் எனக் கருதப்படும் சுமார் 1.6 மில்லியன் பேரின் வீடுகளுக்குச் சென்று அவர்களைப் பொலிசில் சரணடையும்படி கோரியுள்ளனர். பொலிசாரின் வேண்டுகோளை ஏற்று 732,000 பேர் பொலிசில் சரணடைந்துள்ளனர். அவர்களில் 22,500 பேரை பொலிசார் மேல் விசாரணைக்காக கைது செய்துள்ளனர். ஆனால் சிலர் அப்படிச் சரணடைய மறுத்து பொலிசாருடன் துப்பாக்கிச் சமர்களில் ஈடுபட்டதால், அவர்களில் சுமார் 3,600 பேர் இதுவரை மரணமடைந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையை 'மனித உரிமை மீறல்' எனக் கூறி அமெரிக்காவும், சில ஐரோப்பிய யூனியன் நாடுகளும், ஐ.நா. மனித உரிமை அமைப்புகளும், சர்வதேச மன்னிப்பு சபை போன்றவைகளும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மீது நேரடியாகவே கண்டனம் தெரிவித்துள்ளார். சிலர் அவருடைய நடவடிக்கைகளை ஹிட்லர் யூதர்களுக்கு எதிராக மேற்கொண்ட படுகொலைகளுடன் ஒப்பிட்டும் பேசி உள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார். அண்மையில் ஒரு சந்தர்ப்பத்தில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி, "நரகத்துக்குச் செல்" என கடும் தொனியில் ஒபாமாவை திட்டியுள்ளார்.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் நடவடிக்கையை 'மனித உரிமை மீறல்' என மேற்கு நாடுகள் கண்டனம் செய்தாலும், அந்நாட்டு மக்கள் தமது ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அங்குள்ள சமூக ஆய்வு மையங்கள் சில அண்மையில் மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் 84 சதவீதமான பிலிப்பைன்ஸ் மக்கள் தமது ஜனாதிபதியின் நடவடிக்கை மீது திருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஆனால் நடுநிலைமையான சில நோக்கர்களின் கருத்துப்படி, மேற்கு நாடுகளினதும், மனித உரிமை அமைப்புகளினதும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மீதான 'மனித உரிமை மீறல்' கண்டனத்தின் பின்னணியில் சில அந்தரங்க நோக்கங்கள் இருப்பதாகத் தெரிய வருகின்றது. அதற்கான காரணங்களையும் அவர்கள் முன்வைத்துள்ளனர். அவையாவன:

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுற்ரேர்ரே தன்னை ஒரு இடதுசாரி என வெளிப்படையாகவே அறிவித்துள்ளார். இதுவரை காலமும் பதவியில் இருந்த பிலிப்பைன்ஸ் ஜனாதிபதிகள் யாரும் அப்படி அறிவித்ததும் கிடையாது, அவர் போலச் செயல்பட்டதும் கிடையாது.

அதுமட்டுமின்றி, கடந்த 65 ஆண்டுகளாக பிலிப்பைன்ஸ் அமெரிக்காவுடன் கொண்டுள்ள பாதுகாப்பு உடன்படிக்கையையும் அவர் முடிவுக்குக் கொண்டுவர விரும்புவதுடன், அமெரிக்காவின் பரம வைரிகளான ரஸ்யாவுடனும் சீனாவுடனும் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தும் முயற்சிகளிலும் இறங்கியுள்ளார்.

இதுதவிர, பிலிப்பைன்சின் தென் பகுதியில் நிலை கொண்டுள்ள அமெரிக்க பயங்கரவாத – எதிர்ப்புப் படையினரையும் அங்கிருந்து வெளியேறுமாறு அவர் கோரியுள்ளார். அங்குள்ள அமெரிக்கப் படையினரின் நடவடிக்கைகள் அங்கு கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள முஸ்லீம் பிரிவினைவாதிகளுக்கு உதவுகின்றன என்பது அவரது குற்றச்சாட்டாகும்.

அதுமாத்திரமின்றி, தென் சீனக் கடலில் உள்ள சீனாவுக்குச் சொந்தமான சில தீவுகளுக்கு பிலிப்பைன்ஸ், வியட்நாம், தைவான் போன்ற நாடுகளும் உரிமை கோரி வரும் நிலையில், முன்னைய பிலிப்பைன்ஸ் அரசாங்கம் சீனாவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தது. வழக்கை விசாரித்த சர்வதேச நீதிமன்றம் சீனாவுக்கு எதிராகத் தீர்ப்பளித்தது. அமெரிக்காவின் தூண்டுதலிலேயே பிலின்பைன்ஸ் இந்த வழக்கைத் தொடுத்ததாகக் குற்றம் சாட்டிய சீனா, அமெரிக்காவின் ஆலோசனையின் பேரிலேயே சர்வதேச நீதிமன்றம் சீனாவுக்கு எதிராகத் தீர்ப்பளித்துள்ளது என்று கூறி அந்தத் தீர்ப்பை ஏற்க மறுத்துள்ளது.

இருந்தும் தென் சீனக் கடலில் பிலிப்பைன்ஸ் கடற்படையுடன் இணைந்து ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட அமெரிக்கா திட்டமிட்டிருந்தது. ஆனால் பிலிப்பைன்சின் புதிய ஜனாதிபதி அந்த கூட்டு ரோந்தில் பிலிப்பைன்ஸ் கடற்படையைப் பங்குபற்ற வேண்டாம் என உத்தரவிட்டுள்ளார். அத்துடன் இந்த விவகாரத்தில் சீனாவுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிக்காமல் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணபதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றார். அதற்காக முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஒருவரை சீனாவுடன் பேசுவதற்கும் அனுப்பியிருந்தார்.

இது ஒருபுறமிருக்க, உள்நாட்டைப் பொறுத்தவரையிலும் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் அவர் ஈடுபாடு காட்டி வருகின்றார். கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக 'புதிய மக்கள் விடுதலை இராணுவம்' என்ற பெயரிலான இராணுவம் ஒன்றை அமைத்து பிலிப்பைன்ஸ் அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியுடன் போர் நிறுத்தம் செய்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் முயற்சிகளிலும் அவர் ஈடுபட்டு வருகின்றார்.

தவிர, தனிநாடு கோரி போராடி வரும் முஸ்லீம் பிரிவினைவாதிகளுடனும் அவர் சமாதானப் பேச்சுகளுக்கு முயன்று வருகின்றார்.

இவையெல்லாமே மேற்குலகிற்கும் அவற்றின் துணைக் கோள்களாகச் செயற்பட்டு வரும் 'மனித உரிமை' அமைப்புகளுக்கும் கசப்பான விடயங்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மேற்கு நாடுகள் ஒருநாட்டின் மீது மனித உரிமை மீறல் போன்ற ஏதாவது ஒரு குற்றச்சாட்டை வைத்து அந்த நாட்டுக்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்தால், அந்த நாடு அவர்களின் இலக்கில் இருந்து இலேசில் தப்புவது கடினம் என்பதே வரலாறு. இதற்கு இலங்கையில் 2015 ஜனவரி 08இல் மேற்கு நாடுகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஆட்சி மாற்றச் சதி ஒரு அண்மைக்கால உதாரணமாகும்.

இந்த விடயத்தில் பிலிப்பைன்சின் புதிய ஜனாதிபதி ரொட்றிக்கோ டுற்ரேர்ரே எப்படி முகம் கொடுக்கப் போகிறார் என்பதிலேயே பிலிப்பைன்சின் எதிர்காலம் தங்கியுள்ளது.

**- மாதுங்கன்**